பக்கங்கள் - 12 | Registered as a Newspaper in Srilanka | விலை 20/=

# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 97 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 15 வியாழன், 29/05/2014

www.putheyavan.com

நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.
*டிஜிட்டல் பிறின்றிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி- 023-2223545,
மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com

# இலங்கையை தொடர்ந்து கண்காணிக்கிறது சர்வதேசம்




**(ஜெனிவா)** இலங்கையின் கடந்தகால, தற்கால மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான தண்டனை, பொறுப்புக்கூறல், மீள் நல்லிணக கப்பாடு ஆகியவை குறித்து தொடர்ந்தும் கண்காணி க்கப்படும் என்று தெரிவித்துள்ளது ஐ.நா. மனித உரிமைகள் சபை.

கடந்த ஏழு வருடங்களாக சிறீலங்காவின் போர் விவகாரம் தொடர்பான விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்திவரும் ஐ.நா. செயலகம், சர்வதேச சமூகத்தோடும் ஐ.நா. மனித உரிமைகள் சபையோடும் இணைந்து தொடர்ந்தும் இக்கண்காணிப்பை மேற்கொள்ளும் என்றும் இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஐ.நா.சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது ஐ.நா. உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை தலைமையில் இயங்கும் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலய செயலகம், ஜெனிவாவிலுள்ள ஐ.நா. செயலகத்தில் திங்கட்கிழமை 2013 ஆம் ஆண்டுக்கான புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 2012 ஆம் வருட அமர்விலும், 2013 ஆம் வருட (11ம்பக்கம்பார்க்க)

## யுத்தகாலத்தில் காணாமற்போனோர் இதுவரை 18,580 முறைப்பாடுகள்

**(கொழும்பு)** போர்க்காலப்பகுதியில் காணாமற்போனோர் தொடர் பான விரிவான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு விசேட குழு நியமிக்கப்படவுள்ளதாக ஜனா திபதி ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின் அறிக்கை சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் கையளிக் கப்பட்டுள்ளது இது தொடர்பில் விரிவான விசாரணை மேற்கொள்வதற்கான குழுவை நியமிக்க வேண்டும் என சட்ட மாஅதிபர் திணைக் களத்தினூடாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமைக்கு அமை ய இந்த நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (11ம்பக்கம்பார்க்க)


கிளிநொச்சியில் நேற்றைய தினம் த.தே.ம முன்னணியின் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம்

## கடந்த 5 வருடங்களில் 2728 மாணவர்கள் பலி

**(கொழும்பு)** 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை 2 ஆயிரத்து 728 பாடசாலை மாணவர்கள் வாகன விபத்துக்கள் காரணமாக உயிரிழந்துள்ள்தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த காலப் பகுதியில் 8 ஆயிரத்து 524 மாணவர்கள் படுகாயடைந்து அங்கவீனமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைக்கு பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகன சாரதிகள் மட்டுமின்றி பெற்றோர் உட்பட பாதுகாவலர்களும் பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கந்தான பிரதேசத்தில் பாடசாலை ஒன்றின் வாகன (11ம்பக்கம்பார்க்க)

## பாரதிபுரம் மக்களை வெளியேறுமாறு அமைச்சர் றிசாட் மிரட்டல்

**(வவுனியா)**வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வவுனியா பாரதிபுரம் கிராமத்தில் வாழும் மக்களை உடனடியாக வெளியேற்றுமாறு இராணுவத்தின் துணையுடன் அடாவடித்தனம் புரிந்துள்ளமை தொடர்பில் தனக்கு மக்களால் முறையிடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகவும் வறிய நிலையில் உள்ள ஐம்பது குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பாரதிபுரம் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். குறித்த கிராமத்திலுள்ள தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சியில் அமைச்சர் றிசாட் பதியுதீனும் அவருடைய கையாட்களும் கடந்தகாலங்களிலும் செயற்பட்டுவந்துள்ளனர். (11ம்பக்கம்பார்க்க)

## பயங்கரவாத தடுப்பு பிரிவினால் 47பேர் தடுத்துவைத்து விசாரணை!

**(கொழும்பு)**புலிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடுப்பு காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் 47 பேர் தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரணை செய்யப்பட்டு வருவதாக சிறிலங்கா காவல்துறை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வட பகுதியைச் சேர்ந்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் 76 பேரை கைது செய்திருந்த நிலையில் தற்போது 47 பேரை தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தி வருவதாகவும் அதில் ஆறு பேர் பெண்கள் எனவும் சிறிலங்கா காவல்துறை ஊடகப் பேச்சாளரும் சிரேஸ்ட காவல்துறை அத்தியட்சருமான (11ம்பக்கம்பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காண உண்மையாக முயற்சித்தால் ஆதரவளிக்கப்படும் - ஐ.தே.க

**(கொழும்பு)**தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் மெய்யாகவே முயற்சித்தால் அதற்கு ஆதரவளிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கோரிக்கைக்கு அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் சர்வதேச (11ம்பக்கம்பார்க்க)

## என்னையும் கைது செய்து இலங்கைக்கு அனுப்பிவிடுவார்களா?



கடந்த 15 ஆம் தேதி 3 தமிழ் ஈழ அகதிகள் மலேசிய உள்துறை அமைச்சால் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். பின்பு அந்த மூவரும் பயங்கரவாதிகள் எனக் கூறப்பட்டு சிறீலங்கா அரசிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 10 வருடங்களாக இங்கு வாழ்ந்து வரும் அந்த மூவரும் இந்த நாட்டில் எந்த ஒரு சதி நாச வேலையில் ஈடுபட்டதாகவோ, நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்பும் பங்கம் விளைவித்ததாகவோ எந்த ஓர் அத்தாட்சியும் இல்லாமலேயே அவர்கள் திடீரென (11ம்பக்கம்பார்க்க)

24X7
மணிநேர முதன்மை செய்திகளுடன்..
www.putheyavan.com
http://www.
அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்.
உள்ளதை உள்ளபடி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் துறை பொறுப்பாளர் மன்னார் விஜயம்.



பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் துறை பொறுப்பாளர் டானியல் பெயின்டர் மற்றும் திட்டமிடல் பொறுப்பாளர் சஜானி ரனதுாங்க ஆகியோர் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று புதன்(28) கிழமை காலை மன்னாருக்கு வருகை தந்தார்.

-வருகை தந்த அவர் மன்னார் வாழ்வுதையத்தில் இடம் பெற்ற மொழி உரிமை தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

-இதன் போது மன்னார் மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் மொழி தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,அருடதந்தையர்கள்,ஊடகவியலாளர்கள் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் துறை பொறுப்பாளர் டானியல் பெயின்டர் அவர்களுக்கு தெழிவு படுத்தினர்.

-குறிப்பாக மன்னார் மாவட்ட அரச திணைக்களங்களில் இருந்து ஏனைய மாவட்டங்களில் இருந்தும் தமிழ் பேசும் ஒருவருக்கு சிங்கள மொழில் அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள்,வைத்தியசாலையில் நோயளர்கள் வைத்தியர்களுடன் உரையாடும் போது ஏற்படும் மொழிப்பிரச்சினைகள் உற்பட மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்று வரும் காணி அபகரிப்பு தொடர்பிலும் பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள் ',அருடதந்தை யர்கள் ,ஊடகவியலாளர்கள் பிரித்தானிய உயர்ஸ்தானி கராலயத்தின் அரசியல் துறை பொறுப்பாளர் டானியல் பெயின்டர் மற்றும் திட்டமிடல் பொறுப்பாளர் சஜானி ரனதுாங்க ஆகியோருக்கு தெழிவு படுத்தினர்.

குறித்த கலந்துரையாடல் காலை 9 மணி முதல் 10 மணிவரை இடம் பெற்றது.இதன் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை, திருப்பு முனை மையத்தின் இயக்குனர் அருட்தந்தை வின்சன் பற்றிக் உற்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.


## போதைப் பொருளால் வந்த வினை

ஹெறோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றத்தை ஏற்றுக்கொண்ட சந்தேக நபருக்கு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் ரூபா15.000 தன்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார் . இச்சந்தேகநபர் 12.05.2014 அன்று மன்னார் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார் இவர் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டமையை அடுத்தே இவருக்கு இத்தண்டம் விதிக்கப் பட்டது இவ்வாறு அபராதம் விதிக்கப் பெற்றவர் 4ம் கட்டை எருக்கலம் பிட்டி மன்னாரைச் சேர்ந்த இளைஞராவார் .

இதேவேளை கஞ்சாவினை வைத்திருந்த எருக்கலம்பிட்டி மன்னாரை சேர்ந்த சந்தேக நபரொருவர் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டார் அவரை எதிர் வரும் 2.6.2014 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்

அத்துடன்

சட்டவிரோத மதுபானமான கசிப்பு 11 போத்தலை உடமையில் வைத்திருந்த நபரொருவருக்கு 20.000ரூபா அபராதம் விதிக்கப் பட்டதுடன் அபராதத்தை செலுத் தவறின் 3 மாதகால சாதாரண சிறைத் தண்டணை அனுபவிக் குமாறு உத்தர விடப்பட்டது சந்தேக நபரை மடு பொலிசார்கைது செய்திருந்தனர் இவ்வாறு கைது செய்யப்பட்டவர் முள்ளிக்குளம் மேற்கு மடு என்ற முகவரயைச் சோந்த இராசலிங்கம் சசிக்குமார் என்பவராவார் இதேவேளைபொது இடத்தில் சிகரட் புகைத்த குற்றத்துக்காக உப்பளவீதி பெரியகடை மன்னார் என்ற முகவரியை சேர்ந்த நபர் ,ஒருவருக்கு ரூபாஆயிரம் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.



## இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மன்னார் விஜயம்

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் இன்று புதன் கிழமை காலை மன்னார் மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருக்கின்றார்.

வர்த்தக மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிஸாட் பதியூதின் அவர்களின் அழைப்பின் பேரில் அவர் மேற்படி விஜயத்தினை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரிற்கான விஜயத்தினை மேற்கொண்ட உயர்ஸ்தானிகர் மன்னாரின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பாக்கிஸ்தான் உயர்ஸ்தானிகர் மரியாதையின் நிமிர்த்தம் மாவட்டச் செயலகத திற்கும் சென்று அரச உயரதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கான பாக்கிஸ்தான் உயர்ஸ்தானிகரின் மன்னார் விஜயம் குறித்து உத்தியோக பூர்வமாக முன்கூட்டி எதுவும் அறிவி[க்]கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆமிக்கு ஆள்பிடிக்கும் அரச ஊழியர்கள்

யாழ்ப்பாணத்தினில் இலங்கை இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக ஒவ்வொரு கிராம அலுவலரும் ஒரு இளைஞனையோ யுவதியினையோ சேர்த்து வழங்கவேண்டுமென படையினர் உத்தரவிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தினில் ஆட்சேர்ப்பதற்கான முதலாவது பிரச்சார கூட்டம் உடுவில் பிரதேச செயலகத்தினில் இன்று நடத்தப் பட்ட வேளையினிலேயே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மக்களிடையே இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் பிரச்சாரங்களை எடுத்துச்செல்ல கோரியே இராணுவ அதிகாரிகள் இக்கூட்டத்தினை கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களிற்கு நடத்தியுள்ளனர்.அத்துடன் அங்கு வருகை தந்திருந்த பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் அவர்கள் தமது பிரச்சார வளையத்தினுள் விட்டுவைத்திருக்கவில்லை.

ஏதிர்வரும் 31ம் திகதி முதல் பிரதேச செயலக ரீதியாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைபெறுமெனவும் முதலில் நெடுந்தீவினில் தொடங்கி வடமராட்சி கிழக்கு வரையாக ஆட்சேர்ப்பு பிரதேச செயலக ரீதியாக நடைபெறுமெனவும் அவ்வேளையினில் கிராம சேவையாளர்கள் தலா ஒரு நபரினை இணைத்து தரவேண்டுமெனவும் படை அதரிகாரிகள் தரப்பினில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மடுத் தேவாலயத்திற்கு பாப்பரசர் விஜயம் செய்யக்கூடாது என்பதில் பேராயர் இல்லம் தீவிரம்!!

பாப்பரசர் பிரான்ஸ் மன்னார் மடு தேவாலயத்துக்கான விஜயத்தை மேற்கொள்ள கூடாது என்பதில், கொழும்பில் உள்ள பேராயர் இல்லம் தீவிரமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.
அரசாங்கத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த பேராயர் இல்லம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் கூறுகின்றன.
இதன்படி பாப்பரசர் இலங்கை வரும் போது, அவர் பயணிக்கும் பிரதேசங்களின் பட்டியிலில் இருந்து மடு தேவாலயம் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதற்கிடையில் சர்வதேச ஊடகங்களில் பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும், அது குறித்த தங்களுக்கு தகவல் கிடைக்கவில்லை என்று கொழும்பு பேராயர் இல்லம் தெரிவித்துள்ளது.

## அரச நிறுவனங்களின் மீதான மக்களின் நம்பிக்கை இறங்குமுகத்தில்

அரசாங்க நிறுவனங்களின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்தமை இவ்வாறு முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைவதற்கு காரணம் என பெயர் குறிப்பிட விரும்பாத ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு துரித கதியில் காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இந்தக் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகள் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அரசியல் அழுத்தங்கள் மற்றும் பிற காரணிகளினால் விசாரணைகள் சுயாதீனமான முறையில் நடாத்த சாத்தியம் கிட்டுவதில்லை என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

## தமிழர் தாயகத்தின் தலைவிதிஎங்கே?

தமிழ் மக்கள் இலங்கையிலே வடகிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் தேசிய இனங்களில் தமிழ் மக்களும் முதன்மையானவர்கள்

இன்று உலகிலே மூத்த வரலாற்றுப் பின்னணியை கொண்ட மொழி அந்தஸ்து பெற்றவர்கள். தொல்காப்பியத்திற்கு முந்திய இலக்கியபதிவு வேறெந்த மொழியிலும் இல்லை ஆனால் ஆறாவதாகவே

செம்மொழி அந்தஸ்து கிடைத்துள்ளது. தமிழ் மொழியில் இருந்து வந்தகிளை மொழிக்குப் பின்னே செம்மொழி அந்தஸ்து கிடைத்தது வேதனையே. உலகில் 6400 ற்க்கு மேற்பட்ட மொழிகளுக்குள் முதன்மை இலக்கிய தொன்மை கொண்ட மொழி தமிழ்தான். அதே போல் முதலாம் நூற்றாண்டு தொடக்கம் இருபத்தொராம் நூற்றாண்டு வரை ஒவ்வொரு காலகட்டத்திலும் வீரமும் விவேகமும் சிறப்பும்

கொண்ட செழுமையை பதிவாக்கியுள்ள ஆளுமையுள்ள மூத்த மொழியின் வாரிசுகள் எனும் போது பெருமைதான். ஆனால் உலகம் முழுவதும் பரந்துவாழும் தமிழர்கள் பல்வேறு விதமான துறைகளிலும் சாதனை படைத்து முதன்மை நிலையில் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு சரியான முகவரி இல்லை.

உலகிலே குறிப்பிட்ட சனத்தொகையும் நிலத்தொகையும் உள்ள இனங்களே தன் நாட்டில் சுயாதீனமாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் எட்டுக் கோடி தமிழர்கள் உள்ள இனமும் இன்னும் அந்த அந்த நாடுகளுக்கிடையே இரண்டாம் தரப் பிரஜைகளாகவே வாழ்ந்துவருகின்றனர்.

இதனால் உலகம் முழுமையும் வியாபித்து இருந்தும் அர்த்தமற்றதாகவே காணப்படுகின்றது. இந்த நிலையில் சரியானமாற்றம் கொண்டுவர வேண்டும். இனத்துவக் கொள்கை கோட்பாடு உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் நிகழ்ச்சிநிரல் வகுக்கப்பட்டு வாழ்வுரிமை நிறை வேற்றப்படவேண்டும்.

தமிழக மக்களும் இந்திய அரசால் புறக்கணிக கப்படுகின்ற சம்பவங்களே நடந்தேறுகின்றன அதற்குதான் "வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது" என்றார்கள். இதற்கு சிறந்த உதாரணம் தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து தாக்கப்படும் சம்பவங்ளும் இவற்றை மத்திய அரசு ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. தம்மை மாற்றான் தாய் பிள்ளை மனப்பான்மையுடனே அணுகுவதாக தமிழக மக்கள் இப்போது குற்றஞ் சாட்டத் தொடங்கிவிட்டார்கள் அதேபோல் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் அதே நிலையே தொடர்கின்றது.

இது இவ்வாறு இருக்க எமது வடக்கு கிழக்குப் பிரதேசத்தை 1947ம் ஆண்டு தொடங்கி இப்போது மிகக் கணிசமான பகுதி நிலத்தை அபகரித்து விட்டார்கள். இதில் அம்பாறை, திருகோணமலை, வவுனியாவில், ஒருபகுதி தற்போது முல்லைத்தீவில் பல பகுதிகள் மன்னார். கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என எங்கும் திட்டமிட்டநில அபகரிப்பும், இராணுவ பிரசன்னமும் நில ஆக்கிரமிப்பும் என நாளுக்கு நாள் நிலக்குறைப்பு நிகழ்ந்தவண்ண முள்ளது

இது கற்றுக் கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சில் ஒன்றான 2020ம் ஆண்டில் தனி இனத்திற்கு காணி உரிமம் சொந்தமில்லை எனும் நிலைப்பாட்டை அரசாங்கம் மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது ஆனால் வடகிழக்கு எம் முடையதாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை, எனும் நீண்டகால வாழ்வுரிமைப் போராட்டம் என்னவாகப் போகின்றது எனும் சந்தேகம் எழ ஆரம்பித்துவிட்டது. பிரிக்கப்பட்ட வடகிழக்கு மீண்டும் இணைவது சாத்தியப்படப் போகின்றதா? தமிழ் மக்களின் நீண்ட போராட்டத்திற்கு என்ன விமோசனம் கிடைக்கப் போகிறது. எனும் ஆழமான வாதம் பேசு பொருளாகிவிட்டது.

இதனால் தமிழர்கள் யூத நிலையை அடையப் போகிறார்களா? அல்லது தலாய்லாமாநிலையாகப் போகிறதா? காலம் தான் கனதியானபதில் அளிக்க வேண்டும். அது எது வரை சாத்தியம்? ஏக்கம் நீடிக்குமா?

# ராஜபக்ச வருகையை எதிர்த்தது தவறு முன்னாள் இராணுவ அதிகாரி கேர்ணல் ஹரிஹரன்

(சென்னை)
தமிழக அரசியல் கட்சிகள் ராஜபக்சவின் வருகையை இவ்வளவு கடுமையாக எதிர்த்தது, இங்குள்ள தமிழர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஒட்டு மொத்த நலன்களுக்கு விரோதமானது.

மோடியின் மேடைப் பேச்சுக்களை நாம் உற்றுக் கவனித்தால் சில விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியப் பாரம்பரியத்தின் வேர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் ஊறிப்போய் இருப்பதை அதில் நாம் உணர முடியும். அந்த உணர்வுதான், சார்க் நாடுகளின் தலைவர்களை அவருடைய பதவியேற்புக்கு அழைக்க வைத்துள்ளது.

இந்திய இரத்தத்தில் ஊறிப்போய் உள்ள பாரம்பரியப் பழக்கத்தின்படி விடுக்கப்பட்ட அழைப்பாக மட்டுமே இதைப் பார்க்க வேண்டும். பக்கத்து வீட்டுக்காரனோடு தீராத பகை இருந்தாலும், நம் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளுக்கு அவர்களை அழைப்போம் அல்லவா? அதுபோன்றதுதான் இந்தச் செயல்.

இந்த நிகழ்வால் பாகிஸ்தான், இலங்கை உடனான வெளியுறவுக் கொள்கைகள் அடியோடு மாறிவிடும் என்றோ அற்புதம் நிகழ்ந்துவிடும் என்றோ எதிர்பார்ப்பதிலும், இது மிகப்பெரிய இராஜதந்திர நடவடிக்கை என்று பாராட்டுவதிலும், எந்த அர்த்தமும் இல்லை. அப்படி எதுவும் நடந்துவிடவும் முடியாது.

வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பான முடிவுகள், இரு நாட்டுப் பிரச்னைகள் தொடர்பான பேச்சு வார்த்தைகள், அதற்கான ஆலோசனைகள், திட்டங்கள் எல்லாம் முற்றிலும் வேறு முகம் கொண்டவை.

அதே சமயம் தமிழக அரசியல் கட்சிகள் ராஜபக்சவின் வருகையை இவ்வளவு கடுமையாக எதிர்த்தது, இங்குள்ள தமிழர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த நலன்களுக்கு விரோதமானது. இவர்கள் அனைவரும் தமிழர்களின் நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று உண்மையாக நினைத்திருந்தால், நிச்சயமாக அவ்வளவு கடுமையாக ராஜபக்ச வருகையை எதிர்த்திருக்க மாட்டார்கள்.

தமிழக முதலமைச்சர் மற்றும் ஏனைய தமிழக அரசியல் கட்சிகளின் இந்த எதிர்ப்பு, அங்கு முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டு இருக் கும் தமிழர்களுக்கு இன்னும் மோசமான விளைவுகளைத் தான் ஏற்படுத்தும்.

முள்வேலி முகாம்களுக்குள் இருக்கும் தமிழர்களை அங்கிருந்து வெளிக்கொண்டுவர வேண்டுமானால், அந்த நாட்டில் தனி மெஜாரிட்டியுடன் இருக்கும் ராஜபக்சவோடு நீங்கள் சுமுக உறவை வளர்த்தால் மட்டுமே சாத்தியம்.

அப்படிப்பட்ட உறவை ஏற்படுத்த, இதுபோன்ற சமயங்களில் இவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். அதைவிடுத்து எதிர்ப்பதும் கோஷம் போடுவதும் கொடும்பாவி எரிப்பதும் கட்சிக்கு ஆள் சேர்க்கத் தான் பயன்படுமே தவிர, இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு உதவாது.

இன்றும் இலங்கையில் கொழும்பு உள்பட முக்கியமான நகரங்களில் வாணிபம் செய்துகொண்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள், தமிழ்நாட்டுத் தமிழர்கள். அது இங்குள்ள அரசியல்வாதிகள் அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்டச் சூழலில் இவர்கள் தெரிவிக்கும் எதிர்ப்பு என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை, யாரும் சிந்திப்பது இல்லை.

இன்றுள்ள உலக அரசியல் சூழலில் இந்திரா காந்தி பங்களாதேஷில் செய்த போர் அரசியலை செய்ய முடியாது. நம்மால் மட்டுமல்ல... அமெரிக்காவால் கூட அப்படிச் செய்ய முடியாது. அதனால்தான் சிரியா, லிபியா, உக்ரைன், வட கொரியா விவகாரத்தில் அமெரிக்கா அடக்கி வாசிக்கிறது.

அதுபோல், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்தியது போன்ற போராளி இயக்கத்தை இனிமேல் எந்த நாட்டிலும் யாரும் நடத்த முடியாது. இதை எல்லாம் நன்றாக யோசித்துப் புரிந்துகொண்டு, தங்களின் அடிப்படையான அரசியல் நிலைப்பாட்டை தமிழக அரசியல் கட்சிகள் மாற்றி அமைக்க வேண்டும்.

மேலும், தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினை மட்டுமே தமிழகத்தின் பிரச்னை அல்ல. இங்குள்ள பல பிரச்னைகளில் அதுவும் ஒரு பிரச்சினை. அதைப் புரிந்துகொள்ளாமல், ராஜபக்சவின் வருகையைக் காரணம் காட்டி, வலுவான பிரதமராக உருவெடுத்து இருக்கும் மோடியின் அழைப்பை நிராகரித்ததன் மூலம், தமிழகத்தின் நலனையும் இவர்கள் நிராகரித்துள்ளனர்.

ஏனென்றால், தமிழகத்தின் தயவில் மத்திய அமைச்சரவை நடந்து கொண்டிருந்தபோது, இவர்களில் 12 பேர் அங்கு அமைச்சர்களாக இருந்த போதே, தமிழகத்துக்கு ஒரு நன்மையும் நடக்கவில்லை. இப்போது தொடக்கத்திலேயே மத்திய அரசை அவமதித்துவிட்டு, எந்த முகத்தோடு தமிழகத்துக்குத் தேவையான திட்டங்கள், நிதியுதவி ஆகியவற்றைப் போய் கேட்பார்கள்?

மத்திய அரசோடு சுமுக உறவு, அண்டை நாடுகளோடு இணக்கமான போக்கு ஆகியவற்றை வளர்க்க இவர்கள் முன்வர வேண்டும். அதுவே தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் நன்மையை ஏற்படுத்தும்." - தீர்க்கமாக சொல்கிறார் கேர்ணல் ஹரிஹரன்.

# பால்மா விலையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)
பால்மா விலையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக் கோரல தெரிவித்துள்ளார். உலக சந்தையில் பால் மாவின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் பால் மா 450 டொலர்களுக்கும் குறைவாகவே விற்பனை செய்யப் படுகின்றது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு மெற்றிக் தொன் பால் மாவின் விலை 5200 டொலர்கள் வரையில் உயர்வடைந்திருந்தது. இதன் காரணமாக அரசாங்கம் பால் மாவின் விலையை வெகுவாக உயர்த்தியிருந்தது. எனினும், உலக சந்தையில் பால் விலை குறைவடைந்துள்ள போதிலும் இலங்கையில் பால் மாவின் விலை வெகுவாக அதிகரித் துள்ளது.

கூட்டமைப்பு அரசாங்கம் கறுப்புச் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தற்போது கையிருப்பில் உள்ள பால் மா பழைய விலையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை எனவும், இதனால் விலையை குறைக்க முடியாது எனவும் உயர்கல்வி பிரதி அமைச்சர் நந்தி மித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

பாவனைக்குதவாத பெருமளவு உணவுப் பொருட்கள் மீட்பு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் கீழ் உள்ள கோட்டைமுனை பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவு விடுதிகள் மற்றம் வர்த்தக நிலையங்களில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். பொதுமக்கள் சுத்தமான உணவுப் பண்டங்களை பெற்றுகொள்ளும் வகையில் இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கோட்டைமுனை பொதுச்சுகாதார பரிசோதகர் வை.டி.இராகல் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர் பயிலுனர்கள் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது மனித பாவனைக்கு உதவாத மற்றும் காலாவதியான பெருமளவான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொதுச்சுகாதார பரிசோதகர் வை.டி.இராகல் தெரிவித்தார். மேலும், சுகாதாரத்துக்கு கேடுவிளைவிக்கும் வகையில் இருந்த மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். திருமலை வீதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு விடுதிகளிலேயே இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொதுச்சுகாதார பரிசோதகர் வை.டி.இராகல் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவமாதாவின் வணக்கமாத சிந்தனை



பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த லூர்து நகரை (Lourdes) அடுத்த மாசபியேல் (Massa bielle) குகையில் 1858 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 11 ஆம் நாள் 14 வயது மதிக்கத்தக்க பெர்னடெத் சுபிரூயஸ் (Bernadette Sou birous) க்கு காட்சி அளித்தார். அன்னை மரியாள் 18 முறை காட்சியளித்துள்ளார்.

பெர்னத்துக்கு அன்னை மரியாள் அருளிய தனிப்பட்ட செய்தியாவது: இவ்வுலக வாழ்விலே உனக்கு மகிழ்ச்சியை அருள்வேன் என்று நான் வாக்களிக்கவில்லை, மாறாக மறு உலகில் என்றாள். பாவிகள் மனந்திரும்புபடி மன்றாடுங்கள். நோன்பு இருங்கள் என்று கூறிய அன்னையிடம் அம்மா தாங்கள் யார் என்று கேட்ட சிறுமிக்கு நாமே அமல உற்பவம் (25.03.1858) என்று தன்னை அடையாளப் படுத்தினாள்.

வீட்டின் நலனுக்காக விறகுகளைச் சேகரிக்கச் சென்ற பெர்னடெத்துக்கு காட்சி கொடுத்துள்ளார். அன்னையின் தனிப்பிட்ட செய்தியானது பெர்னடெத்துக்கு இவ்வுலகில் துன்பங்கள் இருக்கும் என்பதை உறுதிப் படுத்துகிறது. அன்னை மரியாளை அமல உற்பவியாக கடவுள் படைத்தார், எனும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை இக்காட்சியில் உறுதிப்படுத்துகின்றது.

பெர்னடெத் விறகு சேகரிப்பது அவரின் குடும்பச் சூழலை, ஏழ்மையை வெளிப்படுத்துகிறது. எனவே அன்னை மரியாளும் கடவுளைப்போலவே ஏழைகள்பால் தனிப்பட்ட அன்பினை வெளிப்படுத்துபவராகவே இருக்கிறார். ஏழைகளாகிய நாங்களும் இறையரசுக்குள் செல்வராகும்படி அன்னையின் ஆன்மீகத்துக்குள் நுழைவோம்.

அருட்தந்தை றமேஸ் அ.ம.தி

# "இந்தியாவும் ஈழத்தமிழரும்" அவலங்களின் அத்தியாயங்கள்!

## நிராஜ் டேவிட்

(கொழும்பு)

ஈழப் போராட்டம் இலங்கையில் நடந்தாலும், இந்தியாவின் கால் நூற்றாண்டு கால அரசியலைப் பாதித்த போராட்டம். இந்திய அமைதிப்படையை அனுப்பி 1987-ம் ஆண்டு விடுதலைப் புலிகளோடு யுத்தம் தொடங்கியது முதல் 2009-ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் கோரக் கொலைக்கு இராணுவரீதியாக உதவிகள் செய்தது வரை இந்தியாவை ஆண்ட காங்கிரஸ் அரசு எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் கடுமையான விமர்சனத்துக்கு உரியவை.

சிங்கள அரசின் இரவல் துப்பாக்கியாக காங்கிரஸ் அரசு மாறிவிட்டது என்று ஈழத் தமிழர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இன்றுவரை குற்றச்சாட்டாக வைத்துவரும் நிலையில், "இந்தியாவும் ஈழத்தமிழரும்" என்ற வரலாற்று ஆவணம் புத்தகமாக வந்துள்ளது.

ஈழத்தமிழர் பிரச்னைக்குள் அனுசரணையாளனாக நுழைந்து ஆக்கிரமிப்பாளனாக இந்திய அமைதிப்படை மாறிய கால கட்டத்தில் நடந்த அனைத்தையும் நம் முன் காட்டும் இந்தப் புத்தகத்தை பத்திரிகையாளர் நிராஜ் டேவிட் எழுதியிருகிறார்.

பிறப்பால் ஈழத்தமிழர். அங்கு உண்மையை எழுதியதால் விரட்டப்பட்டு, இப்போது சுவிட்சர்லாந்து நாட்டில் அடைக்கலம் பெற்று வாழ்பவர். அரசியலை ஆய்வுரீதியாகவும், போரை இராணுவ ரீதியாகவும் எழுதக் கூடிய கூர்மையான எழுத்தாளர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக அதாவது, ஈழத்தமிழர்க்கு எதிராக காங்கிரஸ் அரசு மோசமான இராணுவ நடவடிக்கை எடுத்த 1987-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் தேதியில் இருந்து இந்தப் புத்தகம் ஆரம்பம் ஆகிறது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைக்கு ஒரு மில்லியன் ரூபாய் விலை வைக்கப் பட்டு இருந்தது. அவரை உயிருடனோ பிணமாகவோ கொண்டுவரவே முதல் நகர்வு இருந்தது என்கிறார்.

மொத்தம் இரண்டாயிரம் சிறுவர்கள், இரண்டே நாளில் முடித்து விடுவோம்" என்று டெல்லியில் சொல்லிவிட்டு கிளம்பிய அதிகாரிகள், இரண்டு ஆண்டு காலம் திக்கித் திணறிய மொத்த காட்சிகளும் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன. "போர் என்பது ஒரு இலக்கின் மீது, அந்த இலக்கை அழித்து விடும் நோக்கில் அல்லது அந்த இலக்கை வெற்றிகொண்டு ஆக்கிர்மிக்கும் நோக்கில் வலிந்து மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கை.

ஆனால், போராட்டம் என்பதோ தம்மீது நிர்பந்திக்கப்படும் ஆக்கிரமிப்பில் இருந்து தம்மை மீட்டுக் கொள்வதற்கும் தம்மீது திணிக்கப்படும் போரில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் ஒரு தரப்பு மேற்கொள்ளும் தற்காப்பு நடவடிக்கை" என்று மிகச் சரியாகச் சொல்கிறார் நிராஜ் டேவிட்.

அத்தகைய போராட்டத்தை ஈழத்தமிழர்கள் எத்தகைய போர்க்குணத்துடன் நடத்தினர் என்பதை ஒவ்வொரு வார்த்தையும் சொல்கிறது. பஞ்சாபில் நடந்த ஆபரே'ன் புளூ ஸ்டார் நடவடிக்கையில் தமிழ் இராணுவ வீரர்கள் பயன்படுத்தப்பட்டதற்கும் ஈழத்தில் நடந்த இராணுவ நடவடிக்கைக்கு சீக்கியவர்கள் பயன்படுத்தப் பட்டதற்குமான சதியைப் படிக்கும் போது, ஆட்சியாளர்களின் வன்மம் வெளிப்படுகிறது. ரணம் ஏற்படுத்தும் புத்தகம்!

## இன்று

**வைகாசி - 15 வியாழக்கிழமை 29.05.2014**

திதி: பிரதமை பி.இ 1.01
நட்சத்திரம்: ரோகிணி

சுப நேரம்: 7.22 -8.52 வரை
இராகு காலம்: 1.22- 2.52 வரை
எமகண்டம்: 5.52 - 7.22 வரை



## இன்றைய பலன்

29.05.2014

**வழங்கியவர் மணிகண்டன்**




இன்று, சிலர் சொல்லும் அறிவுரை, சங்கடம் உருவாக்கும். அடுத்தவர் மனம் வருந்தாத வகையில், பணிகளை காரணம் சொல்லி விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. நடைமுறை பணச்செலவுக்கு, சேமிப்பு பணம் பயன்படும்.




இன்று, உங்கள் பார்வையில் நடக்கிற வி'யங்களில் இருந்து, புதிய அனுபவம் பெறுவீர்கள். மாற்றங்களை செயல்படுத்த, மனம் விரும்பும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை உயர்ந்து லாப விகிதத்தை அதிகரிக்கும். தாராள மனதுடன், சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள்.




இன்று, உங்களின் நற்செயலை சிலர் குறை சொல்வர். பொறுமை குணம் பின்பற்றி, சிரம சூழ்நிலையை சரி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். பணவரவை அத்தியாவசிய செலவுகளுக்கு மட்டும் பயன்படுத்துவது நல்லது. தாயின் அன்பு, ஆசி மனதிற்கு ஊக்கம் தரும்.




இன்று, உங்கள் நண்பரிடம், முக்கியமான வி'யம் பேசுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும், கூடுதல் நம்பிக்கையும் உருவாகும். தெய்வ அருளால் தொழில், வியாபாரம் செழிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். சுற்றுலா சென்று வர, திட்டமிடுவீர்கள்.




இன்று, எவரிடமும் நட்பு மனப்பாங்குடன் பழகுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு கூடும். வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சிறந்து, திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்களுக்கு அதிர்'டவசமாக, புத்தாடை அணிகலன் வாங்க நல்யோகம் உண்டு.




இன்று, உங்களுக்கு இடையூறு செய்பவரை, அடையாளம் காண்பீர்கள். செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தநிலையை கூடுதல் முயற்சியினால் சரி செய்து, சராசரி பணவரவு பெறுவீர்கள். உணவுப்பொருள் தரம் அறிந்து உண்பது நல்லது.




இன்று, கடந்த காலத்தில், உங்களால் பலம் பெற்றவர் உதாசீனமாக நடந்து கொள்வார். பெருந்தன்மையுடன் மன்னித்து, சொந்தப் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நன்மை பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். விற்பனையாளரின் பகட்டான பேச்சை நம்பி, அதிக பயன்தராத பொருள் வாங்க வேண்டாம்.




இன்று. உங்களின் இளமைக்கால இனிய நினைவை, நண்பரிடம் பகிர்ந்து கொள்வீர்கள். வாழ்வில் வளம் பெற, புதிய செயல் திட்டம் உருவாகும். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில், திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும், தாராள பணவரவு கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.




இன்று, உயர்வான குணம் பின்பற்றி செயல்படுவீர்கள். உறவினர் தாமாக முன்வந்து, சில உதவி வழங்குவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிநிலை ஏற்படும். சராசரி பணவரவுடன், நிலுவைப் பணமும் வசூலாகும். சத்து நிறைந்த உணவுகளை சாப்பிட்டு, உடல் நலம் பேணுவீர்கள்.




இன்று, அதிக நன்மை தரும் என்று நினைத்த செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். மாற்று உபாயம் பின்பற்றுவதால், நிலைமை சீராகும். தொழில், வியாபாரத்தில் குறிப்பிட்ட உற்பத்தி, விற்பனை இலக்கை அடைய, அதிக உழைப்பு தேவைப்படும். பணவரவுக்கு மீறிய செலவு, மனதை வருத்தும். போக்குவரத்தில், கவனநடை பின் பற்றுவது நல்லது




இன்று, உருவாகிற அவசரப்பணி அல்லல் தரலாம். இதனால், சமூக நிகழ்வுகளை அறிவதில் இருந்த ஆர்வம் குறையும். தொழில், வியாபாரத்தில் உள்ள போட்டியை சரி செய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். வி'ப்பிராணிகளிடம் விலகுவது நல்லது.




இன்று, நீங்கள் பொது நல எண்ணத்துடன் செயல்படுவீர்கள். நல்லவர்களின் நட்பு எளிதாக கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தேவைகள், பெருமளவில் பூர்த்தியாகும். இஸ்ட தெய்வ வழிபாடு, சிறப்பாக நடத்துவீர்கள்.

## சிந்திக்க சில வரிகள்

**அழும்போது தனிமையில் அழு**
**சிரிக்கும் போது கூட்டத்தில் சிரி**
**கூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பார்கள்**
**தனிமையில் சிரித்தால் பைத்தியம் என்பார்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை வீட்டுக்குள் குவிந்த இராணுவம்

(யாழ்ப்பாணம்)
நெற்று புதன்கிழமை காலை 4 மணி தொடக்கம் கிளிநொச்சி திருநகரில் வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையின் வீட்டை சுற்றிவளைத்து நின்ற இராணுவம் அவரையும், அவரது குடும்பத்தினரையும் காலைக் கடமைகளை கூடச் செய்ய முடியாதவாறு இடையூறு செய்துள்ளது.

காலை 8.30 மணிவரை அவர் வீட்டில் நிலை கொண்டிருந்த இராணுவம் வீட்டுக்குள் நுழைந்து குடும்பம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசோதித்த பின் சென்றுள்ளனர். இவ்வாறு தான் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமங்களில் இராணுவம் அதிகாலையில் வீடுகளுக்குள் நுழைகின்றது.

காலை வேளைகளில் தமிழ் இளம் பெண்கள், குடும்ப பெண்கள் தமது இரவு ஆடையுடன் வீட்டில் உறங்கும் வேளைகளில், இராணுவம் அதிகாலைகளில் வீடுகளுக்குள் புகுந்த பரிசோதனை என்ற பேரில் சிரமங்களையும் அசௌகரியங்ளையும் ஏற்படுத்தி வருகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்களின் எதிர்ப்புகளை மீறி படைமுகாம்கள் நிறுவ முனையும் படையினர்



(யாழ்ப்பாணம்)
பொதுமக்களின் எதிர்ப்புக்களை மீறியும் யாழ்.மாவட்டத்தில் புதிய படைமுகாம்களை நிறுவுவதற்கென ஏக்கர் கணக்கில் காணிகளை சுவீகரிப்பதில் படைத்தரப்பினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு நேற்றய தினம்(28.05.2014) யாழ்.வடமராட்சி அல்வாய் திக்கம் பகுதியில் பொதுமக்களிற்குச் சொந்தமான 8 ஏக்கர் காணியினை இராணுவத்தினர் சுவீகரிக்கும் நோக்கில் நில அளவையாளர் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வியடம் தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தெரிவிக்கையில். ஜே-400 கிராம அலுவலர் பிரிவிற்குள் அமைந்துள்ள 31 குடும்பங்களுக்குச் சொந்தமான மேற்படி காணிகளை இராணுவ முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கப்படுகின்றது. இது தொடர்பாக அறிந்ததினையடுத்து, தானும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வி.சிவயோகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் அவ்விடத்திற்குச் சென்று காணி அளவிடுவதினைத் தடுத்து நிறுத்த முயன்றோம்.

இருப்பினும் இர்ாணுவத்தினர் எங்களை உள்ளே நுழைய விடாமல் இராணுவ வாகனங்களைக் குறுக்காக விட்டிருந்ததுடன், காணிகள் சுவீகரிப்பதற்கான அளவீடுகளையும் மேற்கொண்டனர். குறித்த காணிகளுக்குச் சொந்தமான குடும்பங்கள் மிகவும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்கள் என்பதுடன், அவர்கள் இந்தக் காணிகளை இழந்தால் அவர்களிடம் மீதமாக எதுவுமே இருக்காது.
இராணுவத்தினர் எடுத்து வரும் இவ்வாறான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் மேலும் அச்சயுணர்வையேற்படுத்தியுள்ளதோடு இராணுவத்தினர் மீது பகையை மேலும் அதிகரித்துள்ளது என்றும் மாகாணசபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

# மின்னல் தாக்கி சிறுமி மரணம்! தாய் படுகாயம் புதுக்குடியிருப்பில் சம்பவம

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, சிவநகர் நகரில் மின்னல் தாக்கத்திற்குள்ளாகி சிறுமி ஒருவர் மரணமடைந்ததுடன், தாய் படுகாயமடைந்து வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் தமிழரசன் உதய குமாரி (வயது 06) என்ற சிறுமியே இவ் வாறு மின்னல் தாக்கி மரணமடைந்த வராவார். இவரது தாயாரான தமிழரசன் சுபாஜினி படுகாயமடைந்துள்ளதாக புதக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் வீட்டில் இருந்த போது கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மின்னல் தாக்கத்திற்குள்ளானதாகவும் பொலிஸார் கூறினர்.

மின்னல் தாக்கத்தில் படுகாயமடைந்த மேற்படி தாய் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர். அதேவேளை, இச்சம்பவத்தில் மரணமடைந்த சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்

# வவுனியா கல்மடு ம.வி கலைப்பிரிவு மாணவனை காணவில்லை!



(வவுனியா)
வவுனியா கல்மடு மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரத்தில் கலைப் பிரிவில் கல்வி கற்று வந்த மகாலிங்கம் றஜீவன் எனும் 17 வயதுடைய் மாணவன் நேற்று முன்தினம் காணாமல் போயுள்ளதாக அறிய முடிகின்றது.

கடந்த 27.05.2014 அன்று தரணிக்குளம் சாஸ்திரி கூழாங்குளம் எனும் முகவரியில் அமைந்துள்ள தனது வீட்டிலிருந்து, அதிகாலை 5.00 மணிக்கு பத்து கிலோ பயிற்றங்காய்களுடன் புறப் பட்டு, வவுனியா நகரப்பகுதியிலுள்ள தினசரி சந்தையில் வியாபாரியிடம் கொடுத்த பின்னர், தான் பயணித்த மிதி வண்டியை குறித்த வியாபாரியின் மரக் கறி விற்பனை நிலையத்துக்கு முன் பாக நிறுத்தி விட்டு, எதிர்ப்புறமாகவுள்ள காகிதாதிகள் (பாடசாலை உபகரணங்கள்) விற்பனை நிலையத்துக்கு சென்று வருவதாக கூறிவிட்டு சென்ற மாணவன் காணாமல் போயுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில், வவுனியா பொலிஸ் நிலையத்திலும், தரணிக்குளம் பொலிஸ் நிலையத்திலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும், வன்னி மாவட்ட [illegible] உறுப்பினர் சிவசக்தி [illegible] பெற்றோரால் முறையிடப்பட்டுள்ளது.

# விக்னேஸ்வரனுக்கு தனியான அழைப்பு அனுப்ப வேண்டும்

## கோரிக்கையை நிராகரித்த பாஜக

(யாழ்ப்பாணம்)
புதுடில்லியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வுக்கு இலங்கையின் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனுக்கு தனியான அழைப்பை அனுப்புவதற்கு பாஜக வும் இந்திய வெளிவிவகார அமைச்சும் மறுத்து விட்டது என்று ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரனுக்கு தனியான அழைப்பை அனுப்ப வேண்டும் என்று பாஜக கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும், அங்கம் வகிக்காத தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் வேண்டுகோள் விடுத்திருந்தன. எனினும், பாஜக வும் இந்திய வெளி விவகார அமைச்சும் அந்தக் கோரிக் கையை நிராகரித்து விட்டன. வெளி நாட்டு அரசுத் தலைவர்களுக்கு மட்டுமே அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

மஹிந்த ராஜபக்சவுடன், விக்னேஸ்வரன் வருவதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு தனியான அழைப்பு அனுப்புவது இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்கும் கடப்பாட்டை இந்தியா மீறுவதாகிவிடும் என்பதாலேயே அவருக்கு அழைப்பு விடுக்க மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மோடியின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்க தன்னுடன் வருமாறு இலங்கை ஜனாதிபதி விடுத்த அழைப்பை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிராகரித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

# நில ஆக்கிரமிப்புக்கு எதிராக கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம்



(கிளிநொச்சி)
தமிழர்களின் நிலங்களை இன்னமும் ஆக்கிரமித்திருக்கும் இலங்கை இராணுவத்தை வெளியேறக் கோரியும் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட த.தே. மக்கள் முன்னணியின் அமைப்பாளர் ஜெகதீஸவரனை விடுதலை செய்யக் கோரியும் இன்று ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

கிளிநொச்சி அரச செயலகம் முன்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகியவை இணைந்து இந்தக்கவனயீர்ப்பு போராட்டத்தினை நடத்தியுள்ளன.

வலிகாமம் வடக்கு, கிளிநொச்சி பரவிப்பாஞ்சான், இரணைத்தீவு, கிளிநொச்சி கரும்புத் தோட்டம், முல்லைத்தீவு, கோப்பாபுலவு உட்பட இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் இருந்து வெளியேறக் கோரியும், தமது சொந்த இடங்களில் மக்கள் வாழ வழிவகை செய்யக் கோரியும் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கோசங்களை மக்கள் பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்ட மக்களும் எழுப்பினர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பிரதிநிதிகள், த.தே.கூட்டமைப்பின் பா.உறுப்பினர்களான சுரேஸ் பிரேமசந்திரன், சி.சிறீதரன் மற்றும் வடமாகாண சபை அமைச்சர்களான குருகுலராஜா, ஐங்கரநேசன், வடமாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பெருமளவோனார் கலந்து கொண்டு குரல் எழுப்பியிருந்தனர்.

# இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் முதல்வர் விக்னேஸ்வரனுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் றொபின் மூடி மற்று அவுஸ்திரேலிய வெளிநாட்டலுவல்கள் மற்றும் வாணிபம் திணைக்களப் பணியாளர் க்ரேவ்ஸ், இலங்கையில் நடைபெறும் செயற்திட்டங்களுக்கு பொறுப்பான அலுவலர் ஆகியோர் வடமாகாணத்தில் அவுஸ்திரேலிய உதவியுடன் மேற்கொண்டு வரும் செயற்திட்டங்களை பார்வையிட வந்திருந்தனர்.

வடமாகாணசபை தங்களிடமிருந்து ஏதாவது உதவி எதிர்பார்க்கிறார்களா, வடமாகாணசபை தனித்து இயங்கப்போதுமான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார்.

அரசியல் ரீதியாக தனித்து இயங்கப் பல முட்டுக்கட்டைகள் விதித்திருப்பதாக கூறி அவற்றை நான் எடுத்துக் கூறினேன். பிரதம செயலாளர் சம்பந்தமாகச் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. பிரதம செயலாளர் அனுசரணையுடன் பதவிப் பொறுப்பை ஏற்க முடியுமென்றும் அவ்வாறு வடமாகாணத்தில் நடைபெறவில்லை எனவும் எடுத்துக்கூறினேன். எவ்வளவுதான் வடமாகாணத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக ஜனாதிபதியும் ஆளுநரும் கூறினாலும் அது நடைமுறையில் நடைபெறவில்லை என்பதையும் எடுத்துக் கூறினேன்.

ஆற்றல் மேம்பாட்டுத் திட்டங்கள் எமக்கு அவசரமாகத் தேவைப்படுவதை எடுத்துக் கூறியபோது அது சம்பந்தமாகப் பரிசீலித்து தாம் ஏதேனும் உதவி செய்வதாக உயர்ஸ்தானிகர் கூறினார்.

போரினால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்கள், வறியவர்கள், வறுமையில் வாடுவோர் தொடர்பான திட்டங்களை அவர்களின் வாழ்க்கையில் மேன்மை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறினேன். எவ்வகையான வழிகளில் இவர்களுக்கு உதவலாம் என்பதையும் தெனிவாக விளக்கிக் கூறினேன்.

வடமாகாணத்தில் மிகப்பெரிய பிரச்சினை நீர்வளம் மற்றும் நிலவளம் என்பவற்றை இராணுவம் கையகப்படுத்தியுள்ளதால் ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்து விளக்கினேன். அரசாங்கம் தமக்குத் தேவையான யெற்திட்டங்களைச் செயற்படுத்த முன்வருகிறார்களே தவிர மக்களுக்குத் தேவையான செயற்திட்டங்களை மக்களின் பிரதிநிதி மூலம் அறிந்து செயற்படுத்த முன் வருவதில்லை என விளக்கினேன்.

கூட்டம் இனிதாக நிறைவெய்தியது. பின்னர் அவர்கள் கிளிநொச்சி செல்வதாக கூறினர். அங்கு தமது செயற்திட்டங்களைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்புவதாக கூறிச்சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலாகிவிட்ட பதவியேர்ப்பு



இலங்கை விடயத்தில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் விடுத்த முதலாவது கோரிக்கையை புதிய இந்திய பிரதமராகப் போகும் நரேந்திர மோடி நிராகரித்துள்ளார். மோடி, பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்யும் வைபவத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' கலந்துகொள்வதை தமிழ் நாட்டுத் தலைவர்களான முதலமைச்சர் ஜெயலலிதா, எதிர்க் கட்சித் தலைவர் மு.கருணாநிதி மற்றும் மோடியின் பாரதீய ஜனதாக் கட்சியோடு கூட்டமைப்பு அமைத்து போட்டியிட்ட வைகோ ஆகியோர் எதிர்த்த போதிலும் பா.ஜ.க அந்த எதிர்ப்பை ஏற்கவில்லை.

சந்தோ'மான நிகழ்வொன்றின் போது அயலவர்களை அழைப்பது தான் இங்கு நடந்துள்ளது என்றும் அதனை தமிழ் நாட்டுத் தலைவர்கள் புரிந்து கொள்வார்கள் என்றும் பா.ஜ.க. பேச்சாளர் நிர்மலா சீதாராமன் கூறியிருக்கிறார்.

தமது பதவிப் பிரமான வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு மோடி, தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் (சார்க் அமைப்பின்) சகல நாடுகளினதும் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். உண்மையிலேயே இதில் அசாதாரணத் தன்மை காண்பதாக இருந்தால் காண வேண்டியது ராஜபக்'வுக்கான அழைப்பில் அல்ல. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீபுக்கு விடுக்கப்பட்ட அழைப்பே அசாதாரணமான அழைப்பாக கருதப்படல் வேண்டும். ஏனெனில் இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பு நாடுகளாக மரபு ரீதியாக கருதப்படுவதில்லை. உண்மை யிலேயே இந்த அழைப்பை விடுக்கும் போது மோடியும் பாகிஸ்தான் பிரதமரைத் தான் மனதில் வைத்துக்கொண்டு அழைப்பு விடுத்திருப்பார். அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மோடியின் வைபவத்தில் கலந்துகொள்ளாவிட்டால் அது அந்த வைபவத்தில் குறையாக விளங்கும் என்று கூற முடியாது. ஆனால் நவாஸ் செரீப் கலந்து கொள்ளாவிட்டால் அது அங்கு தெளிவாக தெரியும் குறைப்பாடாக அமையும்.

பா.ஜ.க.வின் இந்துத்துவக் கொள்கையை கவனத்தில் கொள்ளும் போது பாகிஸ்தானும் உள்ளடங்கும் வகையில் மோடி, சார்க் நாடுகளின் தலைவர்களை அழைப்பதே வித்தியாசமான விடயமாகும். தமிழக தலைவர்கள் இலங்கைத் தலைவர்களுடன் முரண்படுவதை விட பா.ஜ.க.வினர் பாகிஸ்தான் தொடர்பில் முரண்படுகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும். எனவே அந்தப் பிரச்சினைகளை ஒரு புறம் வைத்துவிட்டு சகல சார்க் நாடுகளினதும் தலைவர்களை பா.ஜ.க. அழைக்கும் போது இந்துத் தீவிரவாதக் கட்சி என்று தமக்கு இருக்கும் அவப்பெயரை நீக்கிக்கொள்ள அக்கட்சி முயற்சிக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

பா.ஜ.க. பதவிக்கு வந்த முதன் முறை இதுவல்ல. 1998ஆம் ஆண்டு அடல் பிஹாரி வாஜ்பாயின் தலைமையிலும் அக்கட்சி பதவிக்கு வந்தது. அப்போதும் அக்கட்சியின் தலைவர்கள் இது போன்று பாகிஸ்தான் விடயத்தில் சுமுகமான கொள்கையொன்றை கடைப்பிடிக்க முற்பட்டனர். வாஜ்பாய், பாகிஸ்தானுக்கு பஸ் சேவையொன்றை ஆரம்பித்து முதலாவது பஸ்ஸில் தாமும் பாகிஸ்தானுக்குச் சென்று பாகிஸ்தான் விடயத்திலான இந்திய நிலைப்பாட்டை மாற்ற முயற்சி செய்தார்.

எனவே இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுப்பதானது பாரியதோர் திட்டத்தின் மிகச் சிறியதொர் விடயமாகும். தமிழ் நாட்டுத் தலைவர்கள், இலங்கைத் தலைவர்களுடன் முரண்பட்டுக்கொண்டு இருந்த போதிலும் இந்திய மத்திய அரசாங்கத்திற்கோ அல்லது மத்திய அரசாங்கத்தின் புதிய ஆளும் கட்சியான பா.ஜ.க.வுக்கோ இலங்கை அரசாங்கத்துடன் அவ்வளவு பெரிய பிரச்சினைகள் இல்லை. தமது தேர்தல் பிரசாரத்தின் போதும் மோடி, பாகிஸ்தான் மற்றும் சீனாவை சாடி பேசினாரேயல்லாமல் இலங்கையைப் பற்றி ஒரு வார்த்தையேனும் மோசமாக பேசியதில்லை.

இப்போது மோடியின் சத்தியப்பிரமாண வைபவத்தைப் பற்றி இலங்கையிலும் ஒரு சர்ச்சை உருவாகியிருக்கிறது. தமது பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு மோடி விடுத்த அழைப்பை ஏற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அதற்காக தம்மோடு இணைந்துகொள்ளுமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் முதலமைச்சர் அதனை நிராகரித்துள்ளார்.

மற்றவர்களுடன் நல்வுறவை வளர்த்துக்கொள்வதில் மஹிந்த ராஜபக்ச வல்லவர் என்றே கருதப்படுகிறது. எணவே அவர் இதுபோன்றதோர் அழைப்பை விடுப்பதில் ஆச்சரியப்படத் தேவையில்லை. அதற்காக அவர் பலரது பிறந்த நாட்களையும் இது போன்ற முக்கிய நிகழ்வுகளையும் பாவிப்பதும் உண்டு. அண்மையில் அவர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவுக்கு அவரது பிறந்த நாளில் தொலைபேசியில் அழைத்துள்ளார். ம.வி.மு. தலைவர் அதற்கு பதிலளிக்கவில்லையாம். உண்மையிலேயே ஜனாதிபதி தொலைபேசியில் தம்மை அழைத்தது தம்மை வாழ்த்த அல்ல என்றும் தம்மை வாழ்த்திவிட்டு அதனை ஊடகங்களுக்கு அறிவித்து "புள்ளிகளை" சேகரிப்பதற்காகவே என திஸாநாயக்க பின்னர் கூட்டம் ஒன்றில் பேசும் போது கூறியிருந்தார்.

வட மாகாண முதலமைச்சருக்கான ஜனாதிபதியின் இந்த அழைப்பில் உள்ள ஒரு முக்கியத்துவம் என்னவென்றால் ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மூலமாகவே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது விந்தையானது. வெளிநாட்டலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சர் மூலம் வட மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுப்பதற்கு வட மாகாணம் என்ன வெளிநாடொன்றா? ஜனாதிபதியின் அழைப்பை ஏற்பதானது இலங்கையின் மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இருப்பதாக உலகுக்கு தவறானதோர் கருத்தை கொடுத்துவிடும் என்பதால் தாம் அந்த அழைப்பை ஏற்பதில்லை என்றே வடமாகாண முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்த பதில் சற்று சர்ச்சைக்குரியதாகும். இலங்கையின் மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இருப்பதாக உலகுக்கு காட்டிக்கொள்வதால் ஏற்படப்போகும் நட்டம் என்ன? அல்லது மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இல்லை என்று காட்டிக்கொள்வதில் ஏற்படப் போகும் நன்மை என்ன? என்று ஒருவர் கேட்கலாம்.

ஆனால், தற்போதைய நிலையில் முதலமைச்சர் இந்த முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் என்றே தோன்றுகிறது. தமது மாகாண நிர்வாகத்தை சுமுகமாக நடத்திக்கொண்டு போகும் வகையில் சில அதிகாரிகளை மாற்றுவது போன்ற சிறிய விடயங்களிலும் ஒத்துழைப்பு வழங்க ஜனாதிபதி மறுக்கும் நிலையில் வட மாகாண சபையோடு தாம் சுமூகமான உறவை கொண்டுள்ளதாக உலகுக்கு காட்டிக்கொள்ளவே இந்த அழைப்பின் மூலம் ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்று முதலமைச்சர் நினைப்பது நியாயாமே.

கடந்த காலத்தில் அரசாங்கம் தம்மால் வழங்கக்கூடிய ஒத்துழைப்பை வட மாகாண சபைக்கு வழங்கியிருந்தால் முதலமைச்சர் கட்டாயம் ஜனாதிபதியின் இந்த அழைப்பை ஏற்கத்தான் வேண்டும். அவ்வாறு ஒத்துழைப்பு கிடைத்திருந்தாலும் அவர் ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட போது எதிர்த்ததைப் போல் வட பகுதியில் சில தீவிரவாதிகள் இதனையும் எதிர்க்கலாம். ஆனால் அரசாங்கம் மாகாண சபைக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கியிருந்தால் அவ்வாறான எதிர்ப்புகளை மதியாமல் முதலமைச்சர் நடந்து கொண்டிருக்கலாம்.

எனவே இது தமக்கு அவசியமான குறைந்தபட்ச ஒத்துழைப்பையாவது வழங்காத அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்க மாகாண சபைக்கும் முதலமைச்சருக்கும் கிடைத்த அரிய சந்தர்ப்பமாக முதலமைச்சர் நினைக்கிறார் போலும். அண்மைக் காலமாக வட பகுதியில் அரசியல்வாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் மட்டுமன்றி வட பகுதியில் சாதாரண மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலும் உறவு மோசமாகி வந்துள்ளது. அதிகார பரவலாக்கல் தொடர்பான விடயங்கள், பொது வாழ்க்கையில் தொடரும் இராணுவத்தின் தலையீடுகள், காணி அபகரிப்பு மற்றும் போரில் இறந்தவர்களை நினைவுகூரல் போன்ற பல விடயங்கள் அதற்குக் காரணமாக அமைந்தன.

அவற்றின் போது யார் சரி, யார் பிழை என்பது ஒரு புறமிருக்க, இவற்றால் வட பகுதியில் சாதாரண மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவு மேலும் மோசமாகியது என்பதே உண்மையாகும். இந்த நிலையில் தாம் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று மோடியின் பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொண்டால் அது தம்மை மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிடலாம் என விக்னேஸ்வரன் நினைத்தால் அதுவும் நியாயமே. சிலவேளை அரசாங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாக அவ்வாறு அவரை அந்நியப்படுத்துவதும் இருந்திருக்கலாம். போர் முடிவடைந்தவுடன் இருந்ததைப் பார்க்கிலும் இப்போது வட பகுதியில் தமிழ் அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை அவதானிக்கலாம். குறிப்பாக அப்போது இருந்ததைப் பார்க்கிலும் இப்போது வட பகுதியில் தீவிரவாதம் மீண்டும் வளர்ந்துள்ளது. அரசியல் காரணங்களுக்காகவும் தேர்தல் வெற்றிக்காகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளை பூஜித்தமையும் அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து அவமதிப்புச் செய்து வந்தமையுமே இதற்குக் காரணமாகும். இந்த நிலைமை தொடர்ந்தால் 1970களிலும் 1980களிலும் இடம்பெற்றதைப் போல் அந்தத் தீவிரவாதம் எதிர்காலத்தில் மிதவாத தமிழ் அரசியல்வாதிகளுக்கு சுருக்குக் கயிறாக மாறக்கூடும். ஆனால் இப்போதைக்கு அதன் வளர்ச்சிக்கான காரணங்கள் இல்லாமலும் இல்லை. அவ்வாறு தீவிரவாதம் வளர்ந்து வரும் நிலையில் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு விடயத்தை முதலமைச்சர் செய்தால் அவர் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுவிடலாம். எனவே அவர் ஜனாதிபதியின் அழைப்பை நிராகரிக்கும் போது அதனையும் கருத்திற்கொண்டிருக்கலாம்.

இலங்கைத் தமிழ் அரசியலில் முதலமைச்சர் போன்ற மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் சிறியதோர் பனிப் போர் நடந்து வருவது பலருக்குத் தெரியும். அவர் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையால் நியமிக்கப்பட்ட போதும் அவர் ஜனாதிபதியின் முன் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போதும் இந்தப் பனிப்போர் ஓரளவுக்கு அம்பலத்துக்கு வந்தது. எனவே வட பகுதியில் தீவிரவாதம் மீண்டும் வளர்ந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் அழைப்பை அவர் ஏற்பது அவருக்கு கடினமானதாக இருந்திருக்கும்.

தமிழ் நாட்டுத் தலைவர்கள் தமது சொந்த அரசியலுக்காகவே இலங்கை தமிழர் களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். தம்மைத் தாமே தீ மூட்டிக்கொள்ளும் வகையில் சாதாரண மக்களை உணர்ச்சிவசப்படுத்துகிறார்கள். விக்னேஸ்வரனே இதனை வட மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் காலத்தில் கூறியிருந்தார்.

ஆனால் அவர்களது ஆர்ப்பாட்டங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் நன்மையளித்துள்ளன. எனவே இலங்கை, தமிழ்த் தலைவர்கள் மற்றும் தமிழக தலைவர்களை முற்றாக பகைத்துக் கொள்ளவும் விரும்பு வதில்லை. இலங்கை ஜனாதிபதி, மோடியின் பதவிப்பிரமாண வைபவத்திற்கு வருவதையே விரும்பாத தமிழகத் தலைவர்கள், இலங்கை ஜனாதிபதியோடு வட மாகாண முதலமைச்சரும் இந்தியாவுக்கு வருவதை எவ்வகையிலும் விரும்ப மாட்டார்கள். எனவே ஜனாதிபதியோடு மோடியின் பதவிப்பிரமாண வைபவத்திற்குச் சென்று வீணாக தமிழக தலைவர்களை பகைத்துக்கொள்ள விக்னேஸ்வரனும் விரும்ப மாட்டார். ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, முதலமைச்சர் விக்னேஸ்வரன் புதுடில்லிக்குச் சென்றாலும் புதிய இந்திய பிரதமரின் கவனத்தை ஈர்த்துக்கொள்ள அவருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற உத்தரவாதமும் இல்லை.

ஏனெனில் இது இலங்கைத் தூதுக் குழுவொன்று மட்டும் கலந்துகொள்ளும் வைபவம் அல்ல. அதேவேளை, தமிழக தலைவர்கள் மத்தியில் இலங்கையின் வட பகுதி முக்கியத்துவம் பெற்றுள்ள போதிலும் இந்திய மத்திய அரசாங்கத்தின் பிரதமர் ஒருவருக்கு, அதிலும் வட இந்தியாவைச் சேர்ந்த ஒருவருக்கு வட மாகாண முதலமைச்சர் முக்கியமானவராக தெரிய நியாயம் இல்லை. எனவே இந்தப் பயணத்தால் வட மாகாணம் அடையப் போகும் நன்மை எதுவும் இல்லை என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நினைத்திருக்கலாம்.

நாட்டில் இன நல்லிணக்கத்திற்கு அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையில் நல்லுறவு வளர்வது அத்தியாவசியமாகும். அந்த வகையில் வட பகுதியில் எழுந்த எதிர்ப்புகளை உதறித் தள்ளிவிட்டு விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் முதலமைசசராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை வரவேற்கத்தக்கதாகும். அதேபோல் முதலமைச்சர், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று மோடியின் பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று தென் பகுதியில் பலர் நினைக்கிறார்கள். ஆனால் விக்னேஸ்வரன், ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் இரு தரப்பினரினதும் நடவடிக்கைகள் காரணமாக வட மாகாண சபையும் மத்திய அரசாங்கமும் ஒன்றையொன்று மென்மேலும் அந்நியப்படுத்திக்கொண்டன. எனவே முதலமைச்சர் மோடியின் பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்துகொள்வதில் அர்த்தம் இல்லை என்றும் சிலர் வாதிடலாம்.

உண்மையிலேயே அவர் புது டில்லிக்குச் செல்வதில் கிடைக்கக்கூடிய நன்மையோ அல்லது தீமையோ இல்லை என்றே கூற வேண்டும். ஒரு புறம் மோடியும் ஒரு புறம் மஹிந்தவும் ஒரு புறம் தமிழக தலைவர்களும் மற்றொரு புறம் விக்னேஸ்வரனும் அவரவரது அரசியல் பிரசாரத்துக்காக இந்த சந்தர்ப்பத்தை பாவிக்கிறார்கள். அவ்வளவு தான். மக்கள் நலன் என்பது இதில் மிகக் குறைவாகவே சம்பந்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு ஒன்றில் கொள்ளையிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)
அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள கல்முனைக்குடி பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் பணத்தைக் கொள்ளையிட்ட மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்துள்ளதாக கல்முனை பொலிசார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரிய வருவதாவது கல்முனைக்குடி தைக்கா நகர் வீதியில் உள்ள வீடு ஒன்றில் சம்பவதினமான நேற்று புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு செல்லும் போது வீட்டை திறந்து வைத்துள்ள நிலையில் கொள்ளையர் வீட்டுக்குள் புகுந்து பணத்தை கொள்ளையிட்ட போது வீட்டின் உரிமையாளர்கள் கொள்ளையனைக் கண்டு சத்தமிட்டதையடுத்து அயலவர்கள் கொள்ளையரை மடக்கிப் பிடித்தது நையப்புடைப்பு செய்தனர். இதனையடுத்து 119 பொலிஸ் அவசர சேவைக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிசார் கொள்ளையரை கைது செய்து விசாரணையின் போது அவர் மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் 40 வயதுடைய சாய்ந்தமருதைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் என ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இது தொடர்பாக கல்முனை பொலிசார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# இராவணா பலய பௌத்த சாசன அமைச்சுக்குள் உள்ளிருப்பு போராட்டம்

(கொழும்பு)
சமயங்கள் சம்பந்தமான சம்பவங்கள் குறித்து விசாரிக்க ஸ்தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுக்கு எதிராக இராவணா பலய, பௌத்த சாசன அமைச்சுக்குள் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இராவணா பலய அமைப்பின் பிக்குகள் அமைச்சுக்குள் புகந்து அங்கு அமர்ந்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சின் அதிகாரிகளிடம் பேசிய இராவணா பலய அமைப்பினர், புதிய பொலிஸ் பிரிவு கலைக்கப்பட வேண்டும் என கோரினர். பிக்குமாரின் கோரிக்கை குறித்து அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி அரசாங்கம் தரும் பதிலின் அடிப்படையில் முடிவை எடுப்பதாக அமைச்சின் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பெரும்பாலும் முஸ்லிம்களை இலக்கு வைத்து அண்மைய காலத்தில் நடந்த சம்பவங்களை தொடர்ந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்த புதிய பொலிஸ் பிரிவை ஏற்படுத்தினார்.

# பல கொலைகளுடன் தொடர்புடைய இருவர் கைது

(கொழும்பு)
கொலைகள் பலவற்றுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் களுத்துறை பஸ் டிப்போவுக்கு அருகில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய மேற்கொண்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் கடந்த 15 ஆம் திகதி மாளிகாவத்தையில் ஒருவரை சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். களுத்துறை மற்றும் கிராண்ட்பாஸ் பிரதேசங்களை சேர்ந்த இந்த நபர்களிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, 38 தோட்டக்கள், 8 அங்குலம் நீளமான 6 கத்திகள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று களுத்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளனர்.

# தேயிலைத் தோட்டத்தில் நடமாடும் புலி

(கண்டி)
முதன் முதலில் ஜேம்ஸ் டெயிலர் என்பவரால் தேயிலை செடி பயிரிடப்பட்ட கலஹா நூல்கந்த தோட்டத்தில் புலியின் நடமாட்டம் இருப்பதாக தெரியவருகின்றது. மேற்படி புலி அடிக்கடி மாலை வேளையில் காட்டுப் பகுதியிலிருந்து தேயிலை தோட்டங்களுக்கு வருகை தந்து செல்வதாகவும் தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.
இதனால் தொழிலாளிகளுக்கு பாதிப்பு இல்லையெனவும் தெரிவிக்கின்றனர். மிருகங்களை வேட்டையாடும் நபர்களினால் இப் புலிக்கு ஆபத்து இருப்பதாகவும் தொழிலாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். மேற்படி புலி 8 அடி உயரம் கொண்ட தாகவும் காணப்படுகின்றது.

# தூக்கில் தொங்கிய நிலையில் 15 வயது சிறுவனின் சடலம் மீட்பு



(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடையில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவன் ஒருவனின் சடலத்தை வெல்லாவெளி பொலிஸார் மீட்டுள்ளனர். திக்கோடை, 50 வீட்டுத்திட்டத்தினை சேர்ந்த பேரின்பம் ஜீதன் (15) என்ற சிறுவனே தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இவர் தூக்கில் தொங்கியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பிலான விசாரணையை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுஷ்மா சுவராஜின் நியமனத்தை பேதமின்றி வரவேற்றுள்ள இலங்கை அரசியல் தலைவர்கள்



(கொழும்பு)
இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சராக சுஷ்மா சுவராஜ் நியமிக்கப்பட்டுள்ளதை இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் இன மற்றும் கட்சி பேதமின்றி வரவேற்றுள்ளனர். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமால் பெரேரா,

சுஷ்மா சுவராஜ், இந்தியாவின் அனைத்து கட்சி நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கி கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை வந்திருந்தார். அவர் சர்வதேச உறவுகள் தொடர்பான விடயத்தில் பரந்த அறிவை கொண்டுள்ளவர் என்று கூற முடியும். அவர் வெளிவிவகார அமைச்சர் பதவியில் சிறந்த முறையில் பணியாற்றுவார்.

அவரது பாத்திரம் இந்தியாவுக்கு மாத்திரமல்லாது முழு தெற்காசியாவுக்கும் சிறந்த பலனை கொண்டு வரும் எனவும் நியோமல் பெரேரா கூறியுள்ளார். அதேவேளை சுஷ்மா சுவராஜ், துறையை கையாளக் கூடிய போதுமான திறனை பெற்றவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

எனினும் சுவராஜ் தொடர்பில் கூட்டமைப் புக்கு ஒரு மனக்குறை இருந்தது. இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அரசி யல் தீர்வை காண நாடாளுமன்ற தெரி வுக்குழுவில் பங்கேற்க வேண்டும் என கூட்டமைப்பை கோரியிருந்ததுடன் அது பயன் தரக் கூடியதாக இருக்கும் என வும் சுஷ்மா விளக்கியிருந்தார்.
இதனிடையே சுஷ்மா சுவாராஜ் இந்திய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டமை ஒரு நம்பிக்கையின் ஆதராம் எனவும் இலங்கை தொடர்பில் அவருக்கு அனுபவங்கள் இருப்பதாகவும் நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய - இலங்கை உறவுகளில் அவர் ஒரு நேர்மையான பங்கை வகிப்பார். 2012 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தியிருந்தமை முஸ்லிம் காங்கிரஸுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இதனிடையே சுஷ்மா சுவராஜ் வெளிவிவகார அமைச்சராக நிய மிக்கப்பட்டமை ஒரு பெரிய விடயம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் விபரித்தார்.

அவரது பதவிக்காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் கொள்கையில் வெளிவிவகார அமைச்சு உறுதியாக இருக்க வேண்டும். 2012ஆம் ஆண்டு அவர் இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு தனது வாதத்திற்குள் இருக்க முடியாது போனது எனவும் யோகராஜன் நினைவு கூர்ந்தார்.

அதேவேளை சுஷ்மா சுவராஜ் தனது இலங்கை விஜயத்தின் போது அரச தலைவர்களுடன் சிறந்த உறவுகளை கட்டியெழுப்பியிருந்தரக சிங்கள தேசிய வாத கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் எனவும் 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்ற அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தமிழ் பிரதேசங்களில் சிவில் கடமைகளில் இருந்து இராணுவம் நீக்கப்பட வேண்டும் எனவும் சுஷ்மா சுவராஜ் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குளவி தாக்கியத்தில் 8 பெண் தொழிலாளிகள் வைத்தியசாலையில்



(ஹட்டன்)
ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வனராஜா தோட்டத்தில் 28.05.2014 அன்று காலை 9.00 மணியளவில் குளவி கொட்டியதால் 8 பேர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிந்தவேளையில் தேயிலைப் பகுதியிலிருந்து கலைந்து வந்த குளவி கூடு இவ்வாறு தொழிலாளிகளை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் சிலருக்கு பெரும் பாதிப்பு இல்லையெனவும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் ஏனைய 3 பேர் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# வாழைச்சேனையில் கட்டுத்துவக்குடன் சிறுவன் கைது

(மட்டக்களப்பு)
போதைப் பொருள் கடத்தல் வலையமைப்புடன் இணைந்து, இலங்கைக்கு போதைப் பொருள் அனுப்பும் வெளிநாட்டவர் தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்குறானை பிரதேசத்தில் இரண்டு கட்டுத்துவக்குகளுடன் சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். வாழைச்சேனை பொலிஸ் பிரிவு, மினு மினுத்தவெளி அக்குறானையைச் சேர்ந் த 17 வயது சிறுவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்படி இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் அவரிடம் இருந்தது இரண்டு துவக்குகளையும் கைப்பற்றியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13வது மாடியில் இருந்து விழுந்து இறந்த சிறுவன்

(சார்ஜா)
இந்தியாவை சேர்ந்த ஜோசப் என்பவர் சார்ஜா நாட்டில் என்ஜினீயர் ஆக பணியாற்றி வருகிறார். இவரது மனைவியும் இங்குள்ள ஒரு ஆஸ்பத்திரியில் நர்சாக வேலை செய்து வருகிறார். இந்த தம்பதியர் தங்களது இரண்டு குழந்தை களுடன் சார்ஜா கலை அருங்காட்சியகம் அமைந்துள்ள அல்"வைஹீன் பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பின் 13வது மாடியில் வசித்து வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை, கடைசி குழந்தையை பள்ளி வாக னத்தில் ஏற்றி வழியனுப்பி வைக்க ஜோசப்பின் மனைவி கீழே சென்றார். தூக்கம் கலைந்து விழித்த மூத்த மகன் கெவின்(7), மாடியின் பால்கனி வழியாக கீழே எட்டிப் பார்த் தபோது, கால் தவறி கீழே விழுந்து, ரத்த வெள்ளத்தில் பலியானான்.

பிரேத பரிசோதனைக்கு பின்னர் அவனது உடல் பெற்றோ ரிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதி சடங்குகள் மற்றும் அடக் கத்துக்காக அவனது உடல் இன்று இந்தியாவுக்கு கொண் டு வரப்படுகிறது.

# உக்ரைனில் விமான நிலைய குண்டு வீச்சில் 100 பேர் பலி

(கிவ்)
விமான நிலையத்தை கைப்பற்ற உக்ரைனில் ராணுவம் நடத்திய குண்டு வீச்சில் 100 பேர் பலியாகினர்.

உக்ரைனின் கிழக்கு பகுதியில் பெருமளவில் இருக்கும் ரிய ஆதரவாளர்கள் இங்கும் தன்னாட்சி உரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தி கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். தனியாக படை அமைத்து ராணுவத்துடன் போரிட்டு வருகின்றனர்.


இந்நாட்டின் 2வது மிகப்பெரிய டன்ட்ஸ்க் விமான நிலையத்தை கைப்பற்றி தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். இந்த நிலையில் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பெட்ரோ போரோ சென்கோ போராட்டக்காரர்கள் மீது அதிரடி தாக் குதல் நடத்த உத்தரவிட்டார்.

இதனால் போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் டன்ட்ஸ்க் விமான நிலையத்தில் பதுங்கியிருக்கும் போராட்டக்காரர்கள் மீது குண்டுகளை வீசி தாக்கியது. ரொக்கெட்டுகள் மற்றும் கையெறி குண்டுகளும் வீசப்பட்டன.

போராட்டக்காரர்களின் மறைவிட பகுதிகளில் 500 பாராசூட் வீரர்கள் தரை இறக்கப்பட்டனர். அவர்கள் ரஷ்ய ஆதரவாளர்களுடன் போரிட்டு தாக்குதல் நடத்தினர்.

அதில், போராட்டக்காரர்கள் மற்றும் பொது மக்கள் என 100க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த தகவலை டன்ட்ஸ்க் பிரதமர் அலெக்சாண்டர் போரோடல் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் ராணுவ தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

# தென் கொரியா ஆஸ்பத்திரியில் தீப்பிடித்ததில் 21 பேர் பலி



(சியோல்)
தென்கொரியாவில் ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட தீ விபத்தில் 21 நோயாளிகள் பலியாகினர். தென்கொரியாவின் தலை நகர் சியோல் அருகே ஹயோசரங் நகரம் உள்ளது. இங்குள்ள ஒரு அடுக் குமாடி ஆஸ்பத்திரியில் நேற்று நள்ளி ரவில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது.

அந்த தீ மளமளவென பரவியது. அதை தொடர்ந்து முதல் மாடியில் படுக்கை யில் இருந்த நோயாளிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.
இதற்கிடையே 2வது மாடிக்கு பயங் கரமாக தீ பரவியது. இதனால் கடுமை யான புகை மூட்டம் ஏற்பட்டது. எனவே, உள்ளே புகுந்து நோயாளிகளை காப் பாற்ற முடியவில்லை. தீயணைப்பு படையினருக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டது.

அவர்களும் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இருந்தும் 21 பேர் உயிரி ழந்தனர். அவர்களில் 20 பேர் நோயாளி கள். ஒருவர் பணியில் இருந்த நர்சு ஆவார். தீ விபத்தில் பலியான் அனை வரும் 70 மற்றும் 80 வயதுக்குட்பட்ட முதியவர்கள். கடுமை யான புகை மூட்டம் மற்றும் வயது முதிர்வு காரணமாக இவர்களால் தப்பி ஓட முடியவில்லை.

தென் கொரியாவில் சமீப காலமாக போரிடர்களால் அதிக அளவு உயிரி ழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் கடலில் படகு மூழ்கியதில் பள்ளிக் குழந்தைகள் உள்பட 300 பேர் பலியா கினர். 2 நாட்களுக்கு முன்னதாக பஸ் சில் தீப்பிடித்ததில் 7 பேர் கருகி செத்த னர். 41 பேர் காயம் அடைந்தனர்.

தற்போது ஆஸ்பத்திரியில் தீப்பிடித்து 21 பேர் பலியாகி உள்ளனர். படகு விபத்துக்கு தென் கொரிய அதிபர் பார்க் நியுன் மன்னிப்பு கேட்டார். பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதாக உறுதி அளித்துள்ளார். இச்சம்பவத்துக்கு பொறுப்பேற்று பிரதமர் சங் ஹாங்வன் பதவியை ராஜினாமா செய்தார்.

# இளம் பெண்ணை கல்லால் அடித்து கொலைசெய்த குடும்பத்தினர்

(லாகூர்)
பாகிஸ்தானின், லாகூர் நகரை சேர்ந் தவர் பர்ஷானா இக்பால் (வயது 25) இவருக்கு வேறு இடத்தில் மாப்பிளை பார்த்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்து வந்தனர். ஆனால் அந்த பெண் வேறு ஒரு நபரை காதலித்து பெற் றோரின் சம்மதமில்லாமல் திருமணம் செய்துகொண்டார்.

இந்த வழக்கு குறித்த விசாரணைக் காக, அந்தப் பர்ஷானா உயர்நீதி மன்றக் கட்டிடத்துக்குள் நின்று இருந் தார். அப்போது அவரது தந்தை, சகோ தரர்கள் மற்றும் உறவினர்களில் ஒருவர் ஆகியோர் சேர்ந்து அவரை பிடித்து வைத்துக்கொண்டு, கற்களால் அவரின் தலையில் தாக்கினர் . இதில் அந்த பெண் தலையில் பலத்த காயம் அடைந் து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி இறந்தாக போலீஸ் அதிகாரி உமர் சீமா தெரி வித்து உள்ளார்.

அவரது தந்தையைத் தவிர பெண்ணை தாக்கிய அனைவரும் தப்பியோடி விட்டனர். அவரது தந்தை கைது செய் யப்பட்டிருக்கிறார். குடும்ப கவுரவத்தை காப்பாற்ற என்று பெண்களைக் கொலை செய்வது என்பது என்பது பாகிஸ் தானில் நீண்ட காலமாக நடந்து வரும் ஒரு செயல். இது குறித்து மனித உரி மைக் குழுக்கள் கவலை வெளியிட்டு வருகின்றன.

பாகிஸ்தானின் சில பகுதிகளில் பெண் களே தங்கள் கணவர்களைத் தேர்வு செய்வது என்பது கலாசார ரீதியாக அந்தப்பகுதிகளில் ஏற்றுக்கொள்ளப் படாத ஒன்று என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

# கட்டுமஸ்தான உடலமைப்பு கொண்ட உலகின் வலிமையான சிறுவர்கள்



(ரோமானியா)
ரோமானியா நாட்டை சேர்ந்த 9 வயதான குய்லியானோ ஸ்ட்ரோ மற்றும் 7 வய தான க்ளாடியூ ஆகியோர் உலகின் கட்டுமஸ்தான உடலமைப்பு கொண்ட வர்கள் என பெயர் பெற்றுள்ளனர்.

கரங்கள் மற்றும் இதயத்தை கட்டும ஸ்தானதாக மாற்ற தினமும் 2 மணி நேரம் அவர்கள் பளு தூக்குதலில் ஈடு படுகின்றனர். அவர்கள் இருவரும் பே ரும் புகழும் அடைய வேண்டும் என்ப தற்காக தனது குடும்பத்தையே பிளோ ரன்ஸ் நகரில் குடியேறச் செய்துவிட்டார் 35 வயதான லூலியன் என்ற இவர் களது தந்தை.

ஆனால் அவர்களுடைய திட்டத்திற்கு அங்கு போதிய ஒத்துழைப்பு கிடைக் காததால் மீண்டும் ரொமேனியாவிற்கு திரும்பி தங்கள் தொழிலான பழைய இரும்பு வியாபாரத்தை தொடங்கி உள் ளனர். தற்போது தங்கள் ஜாகையை பிரிட்டனுக்கு மாற்ற அவர்கள் திட்ட மிட்டுள்ளனர்.

9 வயதான குய்லியானோ 90 டிகிரி செங்குத்தான புஷ் அப் உள்பட இரண்டு உலக சாதனை படைத்துள் ளான். கிளாடியூ இவனுக்கு சற்றும் சளைத்தவன் அல்ல என்பதை நிரூபிப் பது போல் கம்பியில் நின்றுகொண்டு பு' அப்பில் ஈடுபட்டு சாதனை படைத்து வருகிறான். இவர்களது சாதனை பய ணம் தொடரவேண்டும் என நாமும் வாழ்த்துவோம்.

# அல்கொய்தா முக்கிய தலைவர் ஏமனில் சுட்டுக்கொலை

(சனா)
ஏமனில் அல்கொய்தா தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஏமன் ராணுவம் அதிரடியாக களம் இறங்கி உள்ளது.

ஏமனில் தீவிரவாதிகள் ஆதிக் கம் நிறைந்த பெய்ட் அல் அதாரி மற் றும் பாணி ஹரம் மாவட்டங்களில் ராணு வ வீரர்கள் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டனர்.

அப்போது தீவிரவாதிகளுக்கும், ராணு வத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதில் பல்வேறு தீவிரவாத தாக்குதல்களில் தொடர்புடைய அல் கொய்தா தீவிரவாத அமைப்பின் முக் கிய தலைவர் சலே அல் டெயிஸ் உள் பட 5 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சண்டையில் ராணுவ அதிகாரிகள் 2 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். தீவிரவாத முகாம்களில் இருந்து வெடி பொருட்களும், கார் குண்டுகளும், பயங் கர ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.

# சீன விமானப்படையில் குரங்கு படை

(சீனா)
சீன தலைநகர் பீஜிங் அருகே ஒரு விமானப்படை தளம் உள்ளது. அங்கு பறவைகள் கூட்டம் பெரும் அச்சுறுத் தலாக உள்ளது. போர் விமானங்கள் புறப்படும் போதும், தரை இறங்கும் போதும் பறவைகள் கூட்டம், கூட்டமாக வந்து விமானங்கள் மீது மோதி விபத்து அபாயத்தை உருவாக்குகின்றன.

இதை சமாளிக்க சீன விமானப்படை யினர் பட்டாசு வெடித்துப்பார்த்தனர். விசேஷ காக்கைகளையும், துப்பாக்கி களையும் கூட பயன்படுத்திப் பார்த்த னர். ஆனால் முற்றிலும் பலன் அளிக்க வில்லை. இறுதியாக, விமானப்படைக்கு உதித்த யோசனைதான், குரங்குகள் படை.

பறவைகளை விரட்டும் வகையில், ஏரா ளமான குரங்குகளுக்கு விமானப்படை பயிற்சி அளித்துள்ளது. பயிற்சியாளரின் விசிலுக்கு அவை கட்டுப்படுகின்றன. மரங்களில் உள்ள பறவை கூடுகளை அழித்தல், பறவைகளை விரட்டுதல் போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றன.

# நைஜீரியாவில் தீவிரவாதிகள் தாக்குதல் 24 பாதுகாப்பு படையினர் பலி


(டமாடுரு)
நைஜீரியாவின் வட கிழக்கு நகரமான புனியாடியில் உள்ள பாதுகாப்பு படையி னரின் முகாம் மீது போகோஹாரம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் பாதுகாப்பு படையினர் 24 பேர் பலியானார்கள்.

இந்த இடத்திற்கு அருகில் தான் கடந்த பிப்ரவரி மாதம் பொதுமக்கள் 59 பேரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். புனி யாடியில் தாக்குதல் நடத்த தீவிரவாதி கள் கவச வாகனத்திலும், ஹைலக்ஸ் டிரக்குகளிலும் வந்ததாக அங்கு வசிக் கும் நேரடி சாட்சி ஒருவர் தெரிவித்துள் ளார். அப்பாவி மக்களை மட்டுமே குறி வைத் து கொன்று வந்த போகோஹாரம் தீவிர வாதிகள் பட்டியலில் தற்போது ராணுவமும் இடம் பெற்றுள்ளது குறிப் பிடத்தக்கது.

இம்முறை தீவிரவாதிகள் பாதுகாப்பு படைகளையும், ராணுவ தளங்களையும், உயர்நீதிமன்றம் மற்றும் அம் மாவட்ட தலைமை பொறுப்பிலுள்ள அப் ஹச னின் இல்லத்தையும் தாக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது ஏன் தெரியுமா?



நீறில்லா நெற்றி பாழ் கோயில் இல்லா ஊர் பாழ் என்பது முதுமொழி. அந்த காலத்தில், ஒரு ஊரை உருவாக்குவதற்கு முன், கோயிலை உருவாக்கினர்.

அதற்கு முன்,நீரோட்டம் பார்த்து, மண்ணின் தன்மை அறிந்து, சாலை அமைத்து, அதன் பின்னரே கோயில் கட்டினர். இதனால் தான் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது என்பர்.

முற்காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்தது. என்ன காரணம்?...

கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். அதன் பின் ஒளிந்திருக்கும் ஆன்மிக உண்மை தெரியவில்லை. ஆனால் அதன் பின் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என தெரிகிறது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி செம்பு(அ) ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக் கலசங்களிலும் அதில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசங்களுக்குக் கொடுக்கின்றன. நெல், உப்பு, கேழ்வரகு, தினை, வரகு, சோளம், மக்கா சோளம், சலமை, எள் ஆகியவற்றைக் கொட்டினார்கள்.

குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாகக் கொட்டினார்கள். காரணத்தைத் தேடிப் பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கிறது. வரகு மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றிருப்பது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

இவ்வளவுதானா? இல்லை, பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை குட முழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது. அதை இன்றைக்கு சம்பிரதாயமாகவே மட்டும் கடைபிடிக்கிறார்கள்.

காரணத்தைத் தேடினால், அந்த தானியங்களுக்குப் பன்னிரெண்டு வருடங்களுக்குத்தான் அந்த சக்தி இருக்கிறது. அதன் பின் அது செயல் இழந்து விடுகிறது!! இதை எப்படி அப்போது அறிந்திருந்தார்கள்? ஆச்சர்யம்தான்.

அவ்வளவு தானா அதுவும் இல்லை. இன்றைக்குப் பெய்வதைப் போன்று மூன்று நாட்களா மழை பெய்தது அன்று? தொடர்ந்து மூன்று மாதங்கள் பெய்தது. ஒரு வேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்து போனால், மீண்டும் எதை வைத்துப் பயிர் செய்வது? இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பில்லை. இதையே மீண்டும் எடுத்து விதைக்கலாமே!.

ஒரு இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடி தாங்கியோ அதுதான் முதலில் எர்த் ஆகும். மேலும் அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கலசங்கள் இடிதாங்கிகள்.

உதாரணமாக கோபுரத்தின் உயரம் ஐம்பது மீட்டர் என்றால் நூறு மீட்டர் விட்டம் வரைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடி தாங்காமல் காக்கப்படுவார்கள். அதாவது சுமார் 75008 மீட்டர் பரப்பளவிலிருக்கும் மனிதர்கள் காப்பாற்றப் படுவார்கள்!.

சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. அது நாலாபுறமும் 75000 சதுர மீட்டர் பரப்பளவைக் காத்து நிற்கிறது! இது ஒரு தோராயமான கணக்கு தான். இதைவிட உயரமான கோபுரங்கள் இதை விட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றன.

# இடி இடிக்கும் போது அர்ஜுனா என்பதன் காரணம்

நம் ஊரில் மழை பெய்யும் போது இடி இடித்தால் போதும். அர்ஜுனா... அர்ஜுனா என்பார்கள் பெரியவர்கள். உடனே, நம் வீட்டு இளசுகள், நீ அர்ஜுனான்னு சொன்னவுடனே, அவன் வில்லையும் அம்பையும் எடுத்துகிட்டு வந்து, இடி சத்தமே இல்லாம பண்ணிட போறானாக்கும் என்று கேலி செய்வார்கள்.

இடிதாங்கி கண்டுபுடிச்சு எத்தனையோ வருஷமாகியும், அதை பில்டிங் மேலே வைக்காம இன்னமும் அர்ஜுனான்னு புலம்பிகிட்டு இருக்கியே! என்று இடியிலிருந்து தப்பும் அறிவியல் உபகரணம் பற்றியும் எடுத்துச் சொல்வார்கள்.

உண்மையில், உண்மையான அறிவியல் காரணம் என்ன தெரியுமா?... இடி பலமாக இடிக்கும் போது, சிலரது காது அடைத்து கொய்ங் என்று சத்தம் வரும். இதிலிருந்து தப்ப அர்ஜுனா என்றால் போதும். காது அடைக்காது.

அர் என்று சொல்லும் போது, நாக்கு மடிந்து மேல் தாடையைத் தொடும். ஜு என்னும் போது வாய் குவிந்து காற்று வெளியேறும். னா என்னும் போது, வாய் முழுமையாகத் திறந்து காற்று வெளியே போகும். இப்படி காற்று வெளியேறுவதால் காது அடைக்காது. அதற்குத் தான் அர்ஜுனா வை நம்மவர்கள் துணைக்கு அழைத்தார்கள்.

அர்ஜுனன் கிருஷ்ண பக்தன் என்பதால், அவன் பெயரை உச்சரிப்பது மனதுக்கு பலம் என்ற ஆன்மிக காரணத்துடன், காது அடைத்து விடக்கூடாது என்ற அறிவியல் காரணமும் இதில் புதைந்து கிடக்கிறது.

# பட்ஜட் விலையில் Toshiba அறிமுகம் செய்யும் புதிய டேப்லட்




**Toshiba** நிறுவனம் விண்டோஸ் 8.1 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட டேப்லட்டினை பட்ஜட் விலையில் அறிமுகம் செய்துள்ளது. Encore 2 எனும் இந்த டேப்லட் 199 டொலர்களாகக் காணப்படுகின்றது.

இதன் சிறப்பம்சங்களாக 8 அங்குல அளவு, 1280 x 800 Pixel Resolution உடைய தொடுதிரை, 64GB சேமிப்பு நினைவகம், 5 மெகாபிக்சல்களை உடைய கமெரா ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனுடன் Office 360 அப்பிளிக்கேஷன் ஒரு வருடத்திற்கு இலவசமாக தரப்படுகின்றது.

இதனுடன் Toshiba நிறுவனம் 10 அங்குல அளவுடைய திரையினை உடைய Encore 2 டேப்லட்டின் மற்றுமொரு பதிப்பினை வெளியிடுகின்றது. இதன் விலை ∕ 269.99 டொலர்கள் ஆகும்.

# ஸ்மார்ட் கைப்பேசி உரையாடல்களை பதிவு செய்ய உதவும் சாதனம்




ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கிடையிலான தொலைபேசி உரையாடல்களை கணனிகளில் நேரடியாக பதிவு செய்வதற்கு நவீன இலத்திரனியல் சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

RECAP USB எனும் இச்சாதனத்தின் ஊடாக USB இணைப்பு மூலம் அப்பிள் மற்றும் ஏனைய கணனிகளில் கைப்பேசி உரையாடல்களை பதிவு செய்துகொள்ள முடியும். மேலும் பாதுகாப்பான முறையில் செயற்படக்கூடிய இச்சாதனம் தற்போது நிதி திரட்டலுக்காக Kick starter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இரு மாதங்களில் RECAPUSB சாதனம் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஸ்மார்ட் கைப்பேசிகளை சார்ஜ் செய்ய உதவும் நவீன சார்ஜர்



ஒரே தடவையில் நான்கு வரையான ஸ்மார்ட் கைப்பேசிகளை சார்ஜ் செய்யக்கூடிய சார்ஜர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

SmartQuad எனும் இச்சார்ஜர் ஆனது 9.6 Amps, 48W மின்னோட்டத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

ஒவ்வொரு குதைகளிலிருந்தும் (Port) 2.4 Amps மின்னோட்டத்தை வழங்கக் கூடியதாக இருக்கும் இத்துணைச் சாதனமானது 100-240 வரையான மின்னழுத்தத்தில் செயற்படக்கூடியது.

இச்சாதனத்தினை மேம்படுத்துவதற்கான பணத்தினை பெறும்பொருட்டு தற்போது Kickstarter தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# அப்பிள் அறிமுகம் செய்யக் காத்திருக்கும் மற்றுமொரு iWatch

அப்பிள் நிறுவனம் உட்பட மேலும் சில நிறுவனங்கள் ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் ஏற்கனவே தனது ஸ்மார்ட் கைக்கடிகார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அப்பிள் நிறுவனம் அதனை இந்த வருடம் அறிமுகம் செய்யவுள்ள நிலையில், தற்போது புதிய தொழில்நுட்பத்திலும், புதிய வடிவமைப்பிலுமான மற்றுமொரு ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் களமிறங்கியுள்ளது. iOS 7 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவுள்ள இக்கடிகாரம் பெண்களுக்காக 1.3 அங்குல அளவுடைய திரையினையும், ஆண்களுக்காக 1.7 அங்குல அளவுடைய திரையினையும் கொண்டதாக வடிவமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஆடம்பரமான சிறிய ரக விமானத்தை வடிவமைத்தது ஹொண்டா

மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் ஜப்பான் நிறுவனமான ஹொண்டா 6 பேர் பயணிக்கக்கூடிய ஆடம்பர விமானத்தினை வடிவமைத்துள்ளது. 2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட HondaJet திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த விமானம் மணிக்கும் 420 மைல்கள் தூரம் பயணம் செய்யக்கூடியது.

சுமார் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறமதியான இந்த விமானம் அடுத்த வருடத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது தவிர 2017ம் ஆண்டளவில் ஸ்டார் வார் (Star War) திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட "ஹவர் பைக்கினை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக ஹொண்டா தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையை வளர்க்க முடியாது, பெற்றோரின் கோரிக்கையை நீதவான் நிராகரிப்பு

பிள்ளையை வளர்க்க முடியாது என பெற்றோர் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கையை நீதவான் நிராகரித்துள்ளார். இரண்டரை வயதான ஆண் குழந்தை ஒன்றை வளர்க்க முடியாது எனத் தெரி வித்து குழந்தையின் பெற்றோர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர். களுத்துறை பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளையை வளர்க்க முடியாத சூழ்நிலை காணப் படுவதாகவும், பிள்ளையை சிறுவர் பராமரிப்பு நிலை யமொன்றில் சேர்க்குமாறும் நீதவானிடம் கோரி யுள்ளனர். எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் பிள்ளையை பெற்றோர் பராமரிக்க வேண்டியது கடமையாகும் எனவும் களுத்துறை நீதவான் அஜித் எம். மாசிங்க நேற்றுமுன்தினம் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். சட்டத்தரணி ஓசதி பெரேராவின் ஊடாக பெற்றோர் நீதிமன்றில் கோரிக் கை விடுத்திருந்தனர்.

கடந்த 2012ம் ஆண்டில் பிள்ளையை வளர்க்க முடியாது எனத் தெரிவித்து பெற்றோர் களுத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். அந்த சந்தர்ப்பத்திலும் குறித்த பிள்ளையை பெற் றோரே வளர்க்க வேண்டுமெனத் தெரிவித்து பொலி ஸார், பிள்ளையை பெற்றோரிடமே ஒப்படைத் திருந்தனர். குழந்தையை பராமரிப்பதற்கு போதியளவு வசதி கிடையாது எனவும் இதனால் சிறுவர் பாரா மரிப்பு இல்லமொன்றில் ஒப்படைக்குமாறும் கோரி மீண்டும் களுத்துறை நீதிமன்றில் சட்டத்தரணி ஊடா க பெற்றோர் கோரியிருந்தனர். எனினும், இந்தக் கோரிக்கையை நீதவான் நிராகரித்ததுடன், பெற்றோ ருக்கு அறிவுரைகளையும் வழங்கியுள்ளார்.

பிள்ளையை பராமரிக்கத் தவறினால் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என நீதவான் எச்சரிக்கை விடுத்துள்ளார். களுத்துறை மஹாஹினியன்கல என்னும் இடத்தைச் சேர்ந்த அமில விஸ்வஜித் சுச ஹேவா மற்றும் இரேசா மதுவந்தி ஆகியோரே இவ் வாறு எச்சரிக்கப்பட்ட பெற்றோராகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புலி உறுப்பினர்களுக்கு எவ்வாறு ஐ.நா அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஸ்ட உறுப்பினர் களுக்கு எவ்வாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மலே சிய பயங்கரவாத தடுப்புப் பிரிவினரும் இலங்கை புல னாய்வுப் பிரிவினரும் கூட்டாக இணைந்து இந்த விசார ணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படைப் பிரிவு இரண்டாம் தலைவர் குஷான்தன் மற்றும் புலனாய்வுப் பிரிவு நான்காம் தலைவர் அன்தராயன் ஆகியோருக்கு எவ்வாறு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராலயம் அகதி அந்தஸ்து வழங்கியது என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகிறது. குறித்த இருவருக்கும் ஐக்கிய நாடு கள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் வழங் கும் அகதி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

குஷான்தனின் கடவுச் சீட்டும் மீட்கப்பட்டுள்ளது. சர்வ தேச பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் குஷான்தன், தான் ஓர் சாதாரண பிரஜை எனத் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு, மலேசிய பிரிவினைவாதத் தலைவர் ஒருவர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## முடிந்தால் அரசாங்கத்தில் இருந்து விலகுமாறு விமல் வீரவன்சவிற்கு சவால்



(கொழும்பு)
முடிந்தால் அரசாங்கத்தில் இருந்து வில குமாறு அண்மையில் தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட ஊவா மாகாண சபை உறுப்பினர் மிஹிமல் முனசிங்க அமைச்சர் விமல் வீரவன்ச விற்கு சவால் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து கொண்டே அர சாங்கத்தை விமர்சிக்காது விலக வேண் டும் என அவர் கோரிக்கை விடுத் துள்ளார். பதுளை பகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அரசாங்கம் சரியான பாதையில் செல்ல வில்லை எனவும், நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச கடந்த சில நாட்களாக அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குருநாகலில் தமிழ் பெண்ணொருவர் கொலை

(குருணாகல்)
குருணாகல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோழி பண்ணை ஒன்றில் பணிபுரிந்து வந்த பார்த்திபன் தர்ஷினி (30) என்ற பெண் கத்தி குத்துக்கு இலக்காகி உயி ரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட் பட்ட பொகவந்தலாவ தோட்டத்தில் வசிக்கும் மேற்படி பெண் பல வருடங் களாக தனது கணவரோடு பணிபுரிந்து வந்ததாகவும் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இச்சம்பவம் இடம்பெற் றுள்ளதாகவும் குருணாகல் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது சடலம் குருணாகல் வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. இக்கொலை தொடர்பான சந்தேக நபர் ஒருவரை குருணாகல் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேற் படி பெண்ணின் உறவினர்களை குருணா கல் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தரவேண்டும்மென பொகவந்தலாவ பொ லிஸ் நிலையத்திற்கு குருணாகல் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித் துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குருணாகல் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடு கடத்தப்பட்டவர்களின் பாதுகாப்பு குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)
மலேசியாவில் இருந்து நாடு கடத் தப்பட்டுள்ள இரண்டு அகதிகள் மற்றும் அடைக்கலம் கோரிய ஒருவரின் பாது காப்பை இலங்கை அதிகாரிகள் உறுதிப் படுத்தவேண்டும் என்று கோரப்பட் டுள்ளது மனித உரிமைகள் கண்காணிப் பகம் இந்தக் கோரிக்கையை நேற்று விடுத்துள்ளது.

இவர்கள் மூவரும் ஐக்கிய நாடுகள் அக திகள் உயர்ஸ்தானிகரக பாதுகாப்பில் இருந்தவர்களாவர். மலேசியா 1951 ஆம் ஆண்டின் அகதிகள் உடன்படிக்கையில் பங்குதாரர் இல்லாத போதும் சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமை களை அந்த நாடு மதித்து நடக்க வேண்டும். அடைக்கலம் பெற்றவர்களை நாடு கடத்தும் போது சுதந்திரம் உட்பட்ட அவர்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த மூன்று பேரும் மலேசியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டமையானது தற்போது சர்வதேசத்தின் வெளிச்சத் துக்கு உட்பட்டுள்ளது என்று கண் காணிப்பகத்தின் ஆசியநிலை உதவி பணிப்பாளர்பில் ரொபட்சன் தெரிவித் துள்ளார்.

இந்த நிலையில் குறித்த மூவ ரும் கிளிநொச்சியில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சை கோடிட்டு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தகவல் வெளியிட்டுள்ளது

## ஆந்திரா, ஒடிசாவிலுள்ள 85 மீனவர்களை விடுவிக்க இந்தியா இணக்கம்

(கொழும்பு)
இந்தியாவின் பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்க இந்திய அர சாங்கம் இணங்கியுள்ளது. 85 மீனவர் கள் இந்தியாவின் ஆந்திரா மற்றும் ஒடி சா ஆகிய இடங்களில் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இவர்களை விடுவிக் கும் செய்தி நேற்று பிரதமர் மோடியை சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக் சவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று இந்திய செய்தித்தாள் ஒன்று கூறுகிறது.

ஏற்கனவே இந்தியாவுக்கு செல்லும் முன்னர் இலங்கையில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கும் உத்தரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விடுத்தி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இணையக்குற்றங்கள் தொடர்பில் பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

(கொழும்பு)
இணையக்குற்றங்கள் தொடர்பில் விழிப் பாக இருக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் வலியுறுத்தியுள்ளனர். என வே இணையத்தள பாவனை மற்றும் குறிப்பாக இ.வங்கி சேவைகளின் போது கவனமாக நடந்து கொள்ளுமாறு பொலி ஸார் கோரியுள்ளனர்.

இணையத்தள பணமாற்றங்களின் போது மாற்று சிம் அட்டைகளை பயன் படுத்துவது சிறந்தது. வங்கி ஒன்றின் இணையத்தை பயன்படுத்தும் போது குறித்த வங்கியின் இணைப்புக்கள் என்று வரும் ஏனைய இணைப்புக்களை தவிர்க்குமாறு பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கோரிக்கை விடுத் துள்ளார்.

கணக்கு இலக்கங்கள் மற்றும் கடன் அட்டைகளின் பாஸ்வேட் போன் றவற்றை கோரி வரும் மின்னஞ்சல் களுக்கு பதிலளிக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார். அண்மைக் காலத்தில் மாத்திரம், குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு இணையக்குற்றங் களுடன் தொடர்புடைய சமூக வலைத் தளங்கள் தொடர்பில் 235 முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அதிகாரப் பரவலாக்கம் நாட்டின் அபிவிருத்தியை வேகமாக்கும் - ஐ.தே.க

(கொழும்பு)
நாட்டில் அதிகாரத்தை பரவலாக்கினால் நாட்டின் அபிவிருத்தி வேகமடையும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனை கூறினார்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அதிகார மாற் றத்தினால் இலங்கைக்கு ஏற்படும் தாக் கங்கள் தொடர்பிலும் அவர் இதன் போது கருத்து வெளியிட்டார்.

இந்திய பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த் தையின் போது 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல் படுத்துவது பற்றி பேசப்பட்டுள்ளது. 13வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்ற அதிகாரங்களை அமுல்படுத் துவது சம்பந்தமாகவும் இரு தலைவர் களும் பேசியுள்ளனர்.

அதிகாரத்தை பரவலாக்கும் எந்த அக்கறையும் அரசாங்கத்திற்கு இல்லை எனவும், அதிகாரத்தை பரவலாக்கு வதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி வேகமாகக் கூடும் எனவும் கிரியெல்ல குறிப்பிட்டார்.

## கைத்தொலைபேசி பாவனையாளர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும்

(கொழும்பு)
கைத்தொலைபேசி பாவனையாளர்கள் தமக்கான தொடர்புகளை பெற்றுக் கொள்ளும் போது அவற்றை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று வலி யுறுத்தப்பட்டுள்ளனர். இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்த கோரிக்கை கைத்தொலைபேசி விற்பனையாளர்களுக்கும் விடுக்கப் பட்டுள்ளது. இதுவரைக்காலமும் தமது தொலைபேசியை பதிவு செய்து கொள் ளாதவர்கள், 132 என்ற இலக்கங்களை அழுத்துவதன் மூலம் அவற்றை பதிவு செய்து கொள்ளலாம் என்று ஒழுங் கமைப்பு ஆணைக்குழு கேட்டுள்ளது.

இந்த கோரிக்கை, தேவையற்ற குற்றச் செயல்களை தடுக்கவே விடுக்கப்பட் டுள்ளதாக ஒழுங்கமைப்பு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையை

அமர்விலும், இலங்கை விவகாரம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பலாபலன்கள் குறித்தும் சிறீலங்காவின் நிலவரம் குறித்தும் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அவதானிப்பை மேற்கொள்ளும் என்றும் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் 2002 முதல் 2009 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற போரின்போது இழைக்கப்பட்ட பெரும் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணையை மேற்கொள்ளுமாறு இவ்வருட மார்ச் அமர்வில் அமெரிக்கா தீர்மானமொன்றின் மூலம் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு ஆணை வழங்கியுள்ளது. இன்னும் இரு வாரங்களில் நவநீதம்பிள்ளையின் அலுவலகம் இந்த விசாரணையை ஆரம்பிக்கவுள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலக அறிக்கையில், ஆணையாளர் நவநீதம்பிள்ளை பல விடயங்களில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். அநேக விவகாரங்களில் இலங்கை அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளை மேற் கொள்ளவில்லை. பொறுப்புக்கூறல் கடப்பாடு, வடபகுதியில் அதிகளவில் இராணுவக் குவிப்பு, இடம் பெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள், மதரீதியான வன்முறைகளை முடுக்கிவிடுதல், சுயாதீன நீதித்துறைக்கு குந்தகமான நடவடிக்கை ஆகியவற்றை நவநீதம்பிள்ளை முன்வைத்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 2013 ஆம் வருட அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட பல அம்சங்கள், 2014 மார்ச் அமர்வுக்கு முன்னர் நிறைவேற்றப் பட்டிருக்கவேண்டும். எனினும் எதுவும் நடக்கவில்லை என்றும் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

## பாரதிபுரம்

இந்த நிலையில் நேற்று இராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படையினரின் துணையுடன் பாகிஸ்தான் நாட்டவர்களுடன் பாரதிபுரம் கிராமத்துக்குச் சென்ற றிசாட் பதியுதீன் அந்த மக்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் தாம் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

அதற்கு பதிலளித்த பாரதிபுரம் மக்கள் தமக்கு இருப்பதற்கு மாற்றிடம் இல்லை என்றும் தாம் அங்கிருந்து வேறு எங்கும் செல்ல முடியாது என்றும் உறுதியாகத் தெரிவித்திருக்கின்றனர்.

அதன் போது, குறித்த காணி வன இலாகாவுக்குச் சொந்தமானது என்றும் எனவே இந்தக் காணியில் எவரும் குடியிருக்க அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்த அமைச்சர் அந்த மக்களுடைய பெயர்விபரங்களை பெற்றுக்கொண்டதுடன், அவர்களை புகைப்படமும் எடுத்துச் சென்றிருப்பதாக மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்தகாலங்களில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் வன இலாவுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்து தமக்கு விருப்பமானவர்களை இதே அமைச்சர் குடியேற்றியுள்ளார். அந்த மக்களுக்கு அவ்வாறான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த அவர் ஒரு அமைச்சர் என்ற வகையில் பாரதிபுரம் மக்களுக்கும் அவ்வாறான ஒரு ஏற்பாட்டினை செய்து கொடுப்பதே தன்னுடைய கடமையாகும். என்பதை அவர் உணர்ந்து நடக்க வேண்டும்.

இன்னமும் பெருமளவான மக்கள் மீள்குடியேறாத நிலையில் வாழ்ந்துவருகின்றனர். அந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பிலான ஆரோக்கியமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாத நிலையில் அரச அமைச்சர் ஒருவர் தொழிற்சாலை அமைப்பதற்காக மக்களை நடுத்தெருவிற்கு விரட்டும் நடவடிக்கையினை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மக்கள் பிரதிநிதிகளாகச் சொல்லிக்கொண்டு அரசியலுக்கு வந்தவர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளில் கை வைக்கும் அநாகரிகமான நடவடிக்கைகளைக் கைவிட்டு அந்த மக்கள் நின்மதியாக வாழ்வதற்கு வழிவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## கடந்த 5

தரிப்பிடத்தில் வாகனம் ஒன்றில் மோதுண்டு ஒரு மாணவன் உயிரிழந்ததுடன் மேலும் 4 பிள்ளைகன் காயடைந்தனர். இந்த சம்பவம் சாரதியின் தவறு காரணமாக ஏற்பட்டுள்ளது.
இவ்வாறான விபத்துக்களை பொலிஸாரினால் மட்டும் தடுக்க முடியாது.

விபத்தை ஏற்படுத்திய சாரதி 35 வருடங்கள் ஆசிரியராக பணியாற்றி பின்னர் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். சாவியை பயன்படுத்தி வாகனத்தை இயக்க முடியாததால், தள்ளி இயக்க முயற்சித்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனவும் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

## யுத்தகாலத்தில்

காணாமற்போனோர் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை சட்ட மாஅதிபர் திணைக்களம் பரிசீலனை செய்துவரும் அதேவேளை, இது தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்கான குழுவை நியமிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச சுட்டிக்காட்டினார்.

போர் காலத்தில் காணாமற்போனோர் தொடர்பில் இதுவரை 18,580 முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாத

அஜித் ரோஹண தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மார்ச் மாதம் ஆறாம் திகதி பளையில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த சிலர் கைது செய்யப பட்டதையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீளவும் உருவாவதாக தகவல்கள் கிடைத்தன. அதற்கமைய அதனுடன் தொடர்புடையவர்களை கைது செய்திருந்த அதேவேளை வெளிநாடுகளில் இருந்து கொண்டு புலிகளின் மீள் எழுச்சிக்கு உதவி செய்து வருகின்றவர்கள் தொடர்பிலும் தகவல்கள் திரட்டப்பட்டன. சிலருக்கு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த 22 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவராக கூறப்பட்ட கோபி தப்பித்துச் செல்ல உறுதுணையாக இருந்த குற்றச்சாட்டின் பேரில் வவுனியா பகுதியைச் சேர்ந்த முத்துலிங்கம் கஜவர்தன் என்பவரை கைது செய்திருந்தோம். பயங்கரவாத தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகரை கோபி துப்பாக்கி சூடு நடத்தி வவுனியாவிற்கு சென்ற பிறகு அங்கிருந்து பதவிய ஊடாக காட்டுப்பகுதிக்கு செல்வதற்கு உதவி செய்துள்ளார். இச் சந்தேக நபரின் தந்தையான கணேஸ் முத்துலிங்கம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து கோபி பயன்படுத்திய சிம்கார்டை வாங்கி கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் கேதீஸ்வரனை கைது செய்துள்ளனர். கோபியினால் பயன்படுத்தப்பட்ட சிம்கார்ட் இவரின் பெயரிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பில் புலனாய்வு பிரிவில் கடமையாற்றிய ஜெகதீஸ்வரன் என்ற சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர். இவர் வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றி வந்துள்ளார். இவர்களிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றார்.

**என்னையும்** பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு சிறீலங்கா அரசிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கலாம் .ஆனால் அந்த இயக்கம் மலேசியாவில் தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல. இதனையொட்டி கடந்த 2004ல் நாடாளுமன்றத்தில் நான் கேள்வி கேட்ட போது தமிழ் ஈழ விடுதலை இயக்கம் இந்நாட்டில் தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல என அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டது.

சிறீலங்காவின் தலைவர்களே அந்நாட்டில் போர் குற்றங்கள் புரிந்தவர்களாகவும், மனித உரிமை மீறல்கள் செய்தவர்களாகவும், இன படுகொலை புரிந்தவர்களாகவும் கருதப்படும் இவ்வேளையில் இந்த மூவரும்அங்கு ஒப்படைக்கப்பட்டிருப்பது மிகவும் துரதிஷ்ட வசமானது.

கடந்த 3 வருடங்களாக தொடர்ந்து ஐநாவின் மனித உரிமை ஆணையத்தினரால் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
இன்னும் விரைவிலேயே சிறீலங்காவின் போர்க் குற்றங்களைஆராய சுயேட்சை ஆணையம் ஒன்றினையும் ஐ நா அமைக்கஉள்ளது.
கடந்த 2009 இல் நடந்த இறுதி கட்ட உள்நாட்டுப் போரின் போது ஏறக்குறைய 80 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள் என்பதற்கு நம்பத் தகுந்த ஆதாரங்களுடன் பதிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
சேனல் 4 ல் வெளியான நோ பயர் சோன் என்ற ஆவணப்படத்தைப் பார்ப்போருக்கு எந்த அளவிற்கு சிறீலங்கா அதிகாரிகள் அந்தப் படுகொலைகளில் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது தெரியவரும்.
மலேசியா 1951ஆண்டு அகதிகள் உடன்படிக்கையில் கையொப்பமிடாவிடினும், அகதிகளின் பாதுகாப்புக்கு மிரட்டல் ஏற்படும் என்று சந்தேகங்கள் எழுந்தால்அவர்களை அவர்களின் நாட்டுக்கு அனுப்பக்கூடாது என்கிறது அனைத்துலகச் சட்டம். அதுவும் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள் நன்கு தெரிந்திருந்தும் அவர்களை அந்த நாட்டிற்கு அனுப்புவது ஓர் இரக்கமற்றச் செயல்.
சிறீலங்கா அதிகாரிகளின் அத்துமீறல்கள் இவ்வளவு தெளிவாகத் தெரிந்து இருக்கும் பொழுது எப்படி நமது விசாரணை அதிகாரிகள் இந்த மூவரையும் திடீரென பயங்கரவாதிகள் என முத்திரை குத்தினர்?

எந்த அளவிற்கு சிறீலங்கா தூதரகம் நமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு தலைமை போலீஸ் அதிகாரியையே தனது கைப்பாவையாக வைத்துள்ளது என்பது தெள்ளத் தெளிவு. நோ பயர் சோன் திரைடப்பட்டபோது லீனா ஹென்றி கைது செய்யப்பட்ட ஒன்றே இதற்கான சிறந்த உதாரணம் என்று கொள்ளலாம்.
என்னையும் கைது செய்து அனுப்பிவிடுவார்களா?

அந்த மூவரும் நிச்சயமாக ஸ்ரீ லங்கா அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டு கடைசியில் கொல்லப்படுவார்கள் என்று துல்லியமாக தெரிந்திருந்தும் ஏன் நமது அதிகாரிகள் வேண்டுமென்றே இந்த குற்றச் செயலுக்கு துணை போகிறார்கள்?

நாளை இதே தூதரக அதிகாரிகள், நான் பயங்கரவாதத்துடன் தொடர்புள்ளவன் என்று குற்றஞ்சாட்டினால் என்னையும் கைது செய்து சிறீலங்காவிற்கு அனுப்பிவிடுவார்களா?

சிறீலங்காவுடனான இருவழி தொடர்பு, மனித உரிமை மீறல்களுக்கும் மனிதநேயத்திற்கும் அப்பாற்பட்டதா?

மனித உரிமை கண்காணிப்பு குழு இந்த நாடு கடத்தலை வன்மையாக கண்டித்ததோடு அல்லாமல், உனக்குப் பாடம் கற்பிப்பேன் என்ற Srilanka-Tamil warதலைப்பிலான அதன் அறிக்கையில் 2000க்கும் 20012க்கும் இடையில் நடைபெற்ற 75 பாலியல் பாலாத்காரம், கற்பழிப்பு போன்ற வழக்குகளை பதிவு செய்துள்ளது. இவைகள் அதிகாரப்பூர்வ தடுப்புக் காவல் மையங்களிலும் ரகசிய தடுப்புக் காவல் இடங்களிலும் நடை பெற்றுள்ளன. போலீசாராலும் ஆயுதப்படையினராலும், துணை ராணுவத்தினராலும் எப்படியெல்லாம் ஆண்களும் பெண்களும் அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு ,கொடுமைப் படுத்தப்பட்டனர் என்பதை தெளிவாக விளக்கி யுள்ளனர்.

இந்த நாடு கடத்தல் மிகவும் கொடூரமான மனிதாபிமான மற்ற செயலாகும். ஐநாவால் அகதிகள் என்ற தகுதி வழங்கப்பட்டு அதற்குறிய அட்டைகள் கொடுக்கப்பட்ட பின்னரும் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்காமல் நாடுகடத்துவது என்பது ஒரு முறையற்றச் செயலாகும்.
இது போன்ற செயல் மலேசியா போன்ற முன்னேறிவரும் நாடுகளுக்கு ஏற்புடையதல்ல.

## இனப்பிரச்சினைக்கு


சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் பாதக விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.என்.பி. கட்சி கடும் அழுத்தங்களை பிரயோகித்து வரும் நிலையில் அரசாங்கத்தினால் அதிகாரப் பகிர்வினை அமுல்படுத்த முடியுமா என்பது தெளிவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐபிஎல் குவாலிபையர் கொல்கத்தா 163 ரன்கள் சேர்ப்பு



பஞ்சாப்- கொல்கத்தா அணிகள் மோதும் ஐ.பி.எல். குவாலிபையர் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டனில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற பஞ்சாப் அணி கேப்டன் பெய்லி டாஸ் வென்று பீல்டிங் தேர்வு செய்தார்.

கொல்கத்தா அணியைச் சேர்ந்த உத்தப்பா- காம்பீர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். காம்பீர் 1 ரன் எடுத்த நிலையில் ஜான்சன் பந்தில் பெய்லியிடம் கேட்ச் கொடுத்து அவுட் ஆனார். அவரது கேட்சை மிட் ஆன் திசையில் நின்ற பெய்லி அருமையாக தள்ளி பிடித்தார்.

அடுத்து உத்தப்பாவுடன் மணீ பாண்டே ஜோடி சேர்ந்தார். முதலில் நிதானமாக விளையாடிய உத்தப்பா அதன்பின் அதிரடி காட்டினார். 30 பந்தில் 42 ரன் எடுத்திருந்த உத்தப்பா அக்சார் பட்டேல் பந்தில் ஆட்டம் இழந்தார். அதே ஓவரில் மணீ பாண்டே 21 ரன் எடுத்து ஆட்டம் இழந்தார். அப்போது கொல்கத்தா அணி 8.5 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 67 ரன் எடுத்திருந்தது.

4-வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த சாகிப் அல் ஹசன்- யூசுப் பதான் ஜோடியும் அதிக நேரம் நீடிக்கவில்லை. அல் ஹசன் 18 ரன்னிலும், பதான் 20 ரன்னிலும் கரன்வீர் சிங் பந்தில் ஆட்டம் இழந்தனர்.


அதன்பின் வந்த சூர்யகுமார் யாதவ் 14 பந்தில் 20 ரன்னும், ரியான் டென் டஸ்கொதே 17 ரன்னும் எடுத்து அவுட் ஆனார்கள். கடைசியாக வந்த சாவ்லா 17 ரன் எடுக்க கொல்கத்தா 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 163 ரன் எடுத்தது. பஞ்சாப் அணி சார்பில் கரண்வீர் சிங் 3 விக்கெட்டும், ஜான்சன், அக்சார் பட்டேல் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் காம்பீர் இடம் பெற்றார்

இந்திய கிரிக்கெட் அணி வரும் ஜுலை மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது.

இந்த தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணி இடம்பெற்ற வீரர்கள் விவரம்:-

டோனி (கேப்டன்), முரளி விஜய், தவான், காம்பீர், புஜாரா, வீராட் கோலி, ரகானே, ரோகித் சர்மா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், புவனேஸ்வர்குமார், முகமது சமி, ஈஸ்வர் பாண்டே, இசாந்த் சர்மா, ஸ்டுவர்ட் பின்னி, வருண் ஆரோன், வித்திமன் சகா, பங்கஜ் சிங்.



இதில் டோனி, காம்பீர், இசாந்த் சர்மா ஆகியோரைத் தவிர மற்றவீரர்கள் இங்கிலாந்து மைதானங்களில் டெஸ்ட் போட்டி விளையாடியது கிடையாது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் இந்திய அணியில் இடம் பிடிக்காத காம்பீர் இத்தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற்றுள்ளார். அதே சமயம் மூத்த வீரரான ஜாகீர்கான் இடம் பெறவில்லை.

காம்பீரை அடுத்து பங்கஜ் என்ற பந்து வீச்சாளர் இடம் பெற்றுள்ளார். இவர் 2013-14 ரஞ்சி டிராபியில் 22.46 ஓவர்கள் வீசி 39 விக்கெட் வீழ்த்தியுள்ளார். அதேபோல் 2010-11 மற்றும் 2011-12 ரஞ்சி டிராவில் ராஜஸ்தான் அணிக்காக அதிக ரன்கள் குவித்துள்ளார். இதனால் அவர் இந்திய அணியில் இடம்பெற்றுள்ளார்.

6 வேகப்பந்து வீச்சாளர்கள், ஒரு ஆல் ரவுண்டர் (பின்னி) இரண்டு ஸ்பின்னர்கள் இடம் பெற்றுள்ளனர்.

# ஐ. பி .எல் மும்பையை ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது சென்னை



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் லீக் சுற்று நிறைவடைந்து தற்போது இறுதிப்போட்டியை நிர்ணயிக்கும் எலிமினேட்டர் சுற்று நடைபெற்று வருகிறது. இதில் 3வது இடத்தில் இருக்கும் சென்னை சூப்பர் கிங்சும், 4-வது இடத்தில் இருக்கும் மும்பை இந்தியன்சும் மோதிக்கொண்டன.

முதலில் டாஸ் வென்ற சென்னை அணி பீல்டிங்கை தேர்வு செய்தது. இதையடுத்து மும்பை அணியில் சிம்மன்சும், ஹசியும் களம் இறங்கினர். இருவரும் சிறப்பான தொடக்கத்தை கொடுத்து வந்தனர். ஹசி 39 ரன்கள் எடுத்த நிலையில் ஜடேஜா பத்தில் அவுட் ஆனார். அதனைத் தொடர்ந்து ஆண்டர்சன் களம் இறங்கினார்.

சிறப்பாக விளையாடி வந்த சிம்மன்ஸ் 67 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். இவர் 44 பந்தில் 4 சிக்ஸ்ர்களும், 5 பவுண்டரிகளும் அடித்தார். அதன் பின் களம் இறங்கிய வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டம் இழந்தனர். இறுதியில் மும்பை அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 173 ரன்கள் எடுத்தது.

174 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி தனது இன்னிங்சை துவக்கியது. இந்த அணியின் துவக்க ஆட்டக் காரர்களாக ஸ்மித்தும் டு பிளசிஸ்சும் களமிறங்கினர். இருவரும் அதிரடியாக ஆடி ரன்களை குவித்தனர். மும்பை அணியின் பந்துவீச்சை ஸ்மித்தும் டு பிளெசிஸ்சும் பவுண்டரிகளை விளாசி ரன் குவிப்பில் ஈடுபட்டனர். 7வது ஓவரின் போது அணியின் ஸ்கோர் 60 ஆக இருந்தபோது 24 ரன்களை குவித்த ஸ்மித் அவுட்டானார்.

அவர் நடையை கட்டிய சில நிமிடங்களிலேயே டு பிளெசிஸ்சும் 35 ரன்னில் அவுட்டாகி பெவிலியன் திரும்பினார். பின்னர் ரெய்னாவும் மெக்கல்லமும் ஜோடி சேர்ந்து வழக்கமான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நன்றாக விளையாடுவார் என எதிர்பார்த்த மெக்கல்லம் 14 ரன்னில் அவுட்டாகி நடையை கட்டினார்.

இதன் பின் ரெய்னாவும், ஹசியும் ஜோடி சேர்ந்து விளையாடினர். ஓஜா வீசிய 16வது ஓவரில் ரெய்னா ஒரு சிக்சரும், ஹசி இரண்டு சிக்சரும் அடித்து கலக்கினர்.

இதனால் 30 பந்துகளில் 50 ரன்களை எடுத்தார் ரெய்னா. ஹசியும் தன் பங்குக்கு 29 பந்துகளில் 40 ரன்களை அடித்து அசத்தினர்.

இதனால் 19வது ஓவரிலேயே 3 விக்கெட் இழப்பிற்கு 176 ரன்கள் குவித்து சென்னை அணி மும்பை அணியை எலிமினேட்டர் சுற்றில் வீழ்த்தி வெற்றி பெற்றது. இனி வரும் வெள்ளியன்று சென்னை அணி பஞ்சாப் அணியுடன் மோத உள்ளது. இதில் வெற்றி பெறும் அணி இறுதி போட்டியில் கொல்கத்தாவை சந்திக்கும்.

# வங்காள தேச தொடருக்கு ரெய்னா கேப்டன் உத்தப்பாவுக்கு இடம்



ஐ.பி.எல். தொடர் முடிந்த உடன் இந்திய கிரிக்கெட் அணி வங்காள தேசத்தில் விளையாட உள்ளது. இதற்கான இந்தியா அணி இன்று அறிவிக்கப்பட்டது. இந்த தொடர் முடிந்தவுடன் இந்திய அணி இங்கிலாந்து செல்ல இருப்பதால் முன்னணி வீரர்கள் பலருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி கேப்டன் டோனி, வீராட் கோலி, ரோகித் சர்மா, தவான், அஸ்வின், ஜடேஜா, புவனேஸ்வர் குமார் மற்றும் முகமது சமி ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் ரெய்னா கேப்டனாக நியமிக் கப்பட்டுள்ளார்.

இந்திய அணி வீரர்கள் விவரம்- சுரேஷ் ரெய்னா (கேப்டன்), ராபின் உத்தப்பா, ரகானே, புஜாரா, ராயுடு, மனோஜ் திவாரி, சகா (விக்கெட் கீப்பர்), பர்வேஸ் ரசூல், அக்சார் பட்டேல், வினய்குமார், உமேஷ் யாதவ், ஸ்டுவர்ட் பின்னி, மோகித் சர்மா, அமித் மிஸ்ரா.

ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக விளையாடி உத்தப்பாவுக்கு இந்திய அணியில் இடம் கிடைத்துள்ளது. நீண்ட இடை வெளிக்குப் பிறகு உத்தப்பா சர்வதேச அணிக்கு திரும் பியுள்ளார்.

அதேபோல் டோனி விளையாடாததால் விருத்திமன் சகாவுக்கு இடம் கிடைத்துள்ளது. பஞ்சாப் அணியில் விளையாடிய சுழற்பந்து வீச்சாளர் அக்சார் பட்டேலுக்கும் இந்திய அணியில் இடம் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தால் 29.05.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.